# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்     ஆசிரியர்: ஆ.செல்வம்

ஜூன் - 2020     இணைய இதழ்     தனிப்பிரதி 10.00


## இதுதான், பாரதப் பிரதமர் உருவாக்கிக் கொண்டிருக்கும் சுயசார்பு இந்தியா!



# நீங்க செய்யணும் - ஆனா நாங்க செய்ய மாட்டோம்!



# அரசு ஊழியர்

ஜூன் 2020

மலர் : 41 இதழ் : 6

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு
ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு
மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன்,
இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*



## சூடா ஒரு கோப்பை சூப்

### இனி இந்தச் சண்டை கஞ்சிக்கும், ஒரு முழக் கந்தைக்கும்!

மண்ணுக்காய்
பாரதச் சண்டையென்றும்,
பெண்ணுக்காய்
ராமாயணச் சண்டையென்றும்,
பேர்போன பழங்கதைகள்
பலர் சொல்லக் கேட்டிருப்பீர் - இப்போ
கண்ணுக்கு முன்னாடி
நம்ம நாட்டில்
தொடங்கிவிட்டது
கஞ்சிக்கும்
ஒருமுழக் கந்தைக்கும்
பெரிய சண்டை!



– வெ.நா. திருமூர்த்தி




தலைவர் மடல்

## ‘போலி’ சூழ் பாரதம்

பிரதமர் நரேந்திர மோடியின் ரூ.20 லட்சம் கோடி அறிவிப்புக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஐந்து நாட்களாக விளக்கவுரை வாசித்தார். அதில் பசியாலும் பட்டினியாலும் தவித்துக்கொண்டிருக்கும் ஏழை எளிய புலம்பெயர் தொழிலாளர்களுக்கான உடனடி நிவாரணங்கள் எதுவும் இல்லை. பத்திரிகையாளர்கள் இதுபற்றி கேட்டதற்கு நாங்கள் மீன் கொடுக்க விரும்பவில்லை. மீன் பிடிக்கக் கற்றுக் கொடுக்கவே விரும்புகிறோம் என்றார். நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பவனுக்கு ஒரு மரக்கட்டையோ, காற்றடைத்த இரப்பர் டியூபோ அல்லது கயிறோ போட வேண்டிய நேரத்தில் தூண்டிலை எப்படிப் போட்டு மீன் பிடிப்பது என்று விளக்கவுரை சொல்வது மாதிரியிருந்தது அவர் அறிவிப்பு.

உலக வங்கியின் தரவுகள்படி இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) ரூ.202 லட்சம் கோடி ரூபாய் என்றும் அதில் இந்த பொருளாதார ஊக்கத் திட்டத்தின் மதிப்பு மொத்த ஜிடிபியில் 10 சதவீதம் என்றும் மத்திய அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் இந்த திட்டத்தின் மதிப்பு வெறும் ரூ.1,86,000/- கோடிதான் என்றார். இவரது கணக்குப்படி பார்த்தால் இந்த நிதி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) ஒரு சதம் கூட இல்லை. இதில் யார் சொல்வது உண்மை என்று ஆராய்ந்தால் கோல்ட்மேன் சாக்ஸ், மோதிலால் ஒஸ்வாய், ஃபிட்ச், எஸ்பிஐ, எடல்வீஸ், பார்க்கலேஸ் போன்ற வெளிநாட்டு தரகு நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் இந்தத் தொகை இந்திய ஜிடிபியில் ஒரு சதவீதத்திற்கும் கீழ்தான் என்ற உண்மையை கண்டறிந்து வெளியிட்டுள்ளன.

இதற்குக் காரணம் மத்திய அரசு அறிவித்த திட்டங்களில் பல அறிவிப்புகள் மற்றும் சில நிதி உதவித் திட்டங்கள் முன்பே அறிவித்தவைதான் என அவை பட்டியலிட்டுள்ளன. ஆக நிதியமைச்சர் 5 நாட்கள் வரிசைப்படுத்திய திட்டங்கள் பலவும் நேரடியாக இந்திய பொருளாதாரத்தில் பணத்தை புழங்கச் செய்வதாக இல்லை என்று பொருளாதார நிபுணர்கள் பலபேர் சொல்லிவிட்டார்கள். எப்படியும் இதை பொருளாதார வல்லுநர்கள் கண்டறிந்து விடுவார்கள் என்று மத்திய அரசுக்குத் தெரியும். ஆனாலும் ஏன் ஐந்து நாட்களாக பொய்யுரை



வாசித்தார் நிதியமைச்சர். மக்களை சுலபமாக ஏமாற்றிவிடலாம் என்பதால்தான்.

ஸ்பெயின், சிங்கப்பூர் போன்ற நாடுகள் சுற்றுலாவில் சிறந்து விளங்குபவை. கியூபா, தாய்லாந்து நாடுகள் கரும்பு உற்பத்திக்கும், ஸ்வீடன், டென்மார்க் நாடுகள் மரங்களுக்கும், பிரேசில், நியூசிலாந்து நாடுகள் பால் வளத்திற்கும், சவுதி அரேபியா எண்ணெய் வளத்திற்கும் சிறப்பு பெற்றவை. இப்படி ஒவ்வொரு நாடும் ஒரு வளத்தை வைத்துக்கொண்டு வளர்ந்து, தன்னிறைவு அடைந்து உலகின் பிறநாட்டவர்க்கும் வேலை வாய்ப்பு, வாழ்வாதாரம் ஆகியவற்றைத் தருகின்றன.

ஆனால் மேற்சொன்ன அத்தனை வளங்களையும் ஒருங்கே அமையப்பெற்ற நாடு நம் இந்தியா. இவற்றோடு கனிம வளம், காட்டுவளம், மண்வளம், மலைவளம், நீர்வளம், மனிதவளம் இவை அனைத்தையும் தாண்டி சிறந்த அறிவும் ஆற்றலும் திறனும் கொண்ட இளைஞர் வளம் உள்ள நாடு. இத்தனை வளங்கள் மிகுதியாய் இருந்தும், இந்நாட்டில் வறுமை கோட்டிற்கும் கீழ் பல கோடி மக்களும், வேலை வாய்ப்பில்லாமல் பலகோடி இளைஞர்களும், அடுத்த வேளை சோற்றுக்கு உணவில்லாமல் மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயரும் தொழிலாளர்களும் வாடுவது ஏன் என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

ஆட்சியாளர்கள் சரியில்லையா? அரசியலமைப்புச் சட்டம் சரியில்லையா? அல்லது மக்கள்தான் சரியில்லையா? ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் ஆட்சி வியாபாரத்தில் விலைபேசப்படுவது இந்திய மக்கள் எதிர்காலமும், வாழ்வுரிமைகளும் என்பதை நம்மில் எத்தனை பேர் புரிந்து கொண்டிருக்கிறோம். இந்திய அரசியலில் அரசியல் கட்சிகளின் கொள்கைகள், வாக்குறுதிகள் எத்தனை போலியானவையாக, மலினமானவையாக, மக்கள் நலத்தை சூறையாடுபவையாக உள்ளன என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு, கட்சிகளின் மதுவிலக்குக் கொள்கைகள்.

தில்லியில் ஆம் ஆத்மி கட்சி மதுக்கடைகள் திறப்பதை பா.ஜ.க.எதிர்க்கிறது, உ.பி.யில் பா.ஜ.க.மதுக்கடைகள் திறப்பதை காங்கிரஸ் எதிர்க்கிறது. பஞ்சாபில் காங்கிரஸ் மதுக்கடைகள் திறப்பதை ஆம்ஆத்மி கட்சி எதிர்க்கிறது. தமிழகத்தில் ஆளும் அ.தி.மு.க. மதுக்கடைகள் திறப்பதை தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்க்கின்றன. இந்த அரசியல் கட்சிகளுக்கு ஆளும்போது ஒரு கொள்கை, எதிர் வரிசையில் உள்ளபோது வேறு கொள்கை, மொத்தத்தில் அரசியல்வாதிகள் அனைவருக்கும் மக்களை ஏமாற்றி பிழைப்பு நடத்துவதே பொதுக் கொள்கையாக மாறிவிட்ட பின் அவர்கள் மக்களிடம் போலியாக இல்லாமல் நேர்மையாக இருக்க வழி ஏது?

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் நடந்து கொண்டும், ஏழைகள் பட்டினியால் வாடிக்கொண்டும், சாமானிய மக்கள் அன்றாட வாழ்வாதாரத்திற்கு வழிதெரியாமலும் செய்வதறியாது நிர்க்கதியாக நின்றிருக்கும் நேரத்தில் பிரதமர் மோடியும் அவரது அமைச்சரவை சகாக்களும் இந்தியாவை தனியாருக்கு விற்றுவிட திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மூன்றாவது கட்ட ஊரடங்கு முடிவடைந்த நேரத்தில் பிரதமரின் ரூ.20 லட்சம் கோடி அறிவிப்பில் இனி அடுத்தவரை நம்பிப் பயனில்லை, சுயசார்பு பொருளாதாரம்தான் ஒரே வழி என அவர் வாய்ப்பந்தல் போட்டதைப் பார்த்து இந்திய மக்கள் நெகிழ்ந்திருந்த நேரத்தில் சுயசார்பு பொருளாதாரத்தை எட்ட வேண்டும் என்றால் இந்திய அரசில் உள்ள முக்கியத் துறைகள் அனைத்தையும் தனியாகளுக்கும் கார்ப்பரேட்டுகளுக்கும் தாரை வார்ப்பதன் மூலம் மட்டுமே முடியும் என்று இந்திய மக்கள் தலையில் ஒரே போடாக போட்டார் நிதியமைச்சர்.

இராணுவத் தளவாடங்களை தனியார்மயமாக்குதல், மின்துறையை கொஞ்சம் கொஞ்சமாக தனியாரிடம் ஒப்படைப்பது, நிலக்கரி சுரங்கங்களில் தனியார் ஈடுபடுவதற்கான கட்டுப்பாடுகளை தளர்த்துவது, கனிம வளங்களை தனியாருக்கு



தருவது, விமான நிலையங்களை தனியாருக்கு தாரை வார்ப்பது மற்றும் விமானங் களின் பராமரிப்பு, பழுதுபார்த்தல் போன்றவற்றின் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு தனியார்மய மாக்கும் நடவடிக்கைகளுக்கு அடிக்கல் நாட்டியாகி விட்டது.

ஒருபுறம் மக்கள் பசியாலும் பட்டினியாலும் வேலை வாய்ப்பின்மையாலும் சொந்த ஊருக்கு திரும்ப வழிவகை இல்லாமல் தகிக்கும் வெய்யிலில் தார்ச்சாலைகளில் நடந்து கொண்டிருக்க மறுபுறம் பிரதமர் மோடியும் அவரது சக அமைச்சர்களும் இவை பற்றியெல்லாம் கவலைப்படாமல் இந்திய பொதுத் துறை நிறுவனங்களை கூறுபோட்டு தனியாருக்கு விற்பனை செய்யும் ஏற்பாடுகளில் பிஸியாக உள்ளனர்.

*இராணுவத் தளவாடங்களை தனியார்மயமாக்குதல், மின்துறையை கொஞ்சம் கொஞ்சமாக தனியாரிடம் ஒப்படைப்பது, நிலக்கரி சுரங்கங்களில் தனியார் ஈடுபடுவதற்கான கட்டுப்பாடுகளை தளர்த்துவது, கனிம வளங்களை தனியாருக்கு தருவது, விமான நிலையங்களை தனியாருக்கு தாரை வார்ப்பது மற்றும் விமானங்களின் பராமரிப்பு, பழுதுபார்த்தல் போன்றவற்றின் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளுக்கு அடிக்கல் நாட்டியாகிவிட்டது.*

இதுதான் ஒரு பேரிடர் காலத்தில் ஒரு அரசாங்கம் தன்னுடைய ஏழை எளிய மக்களை நடத்தும் முறை. இந்த ஆட்சியாளர்கள் மக்களின் மீது காட்டும் இந்த அக்கறை உண்மையானதா? அல்லது போலியானதா? யாருக்காக இந்த அரசாங்கம்? யாருக்காக இந்த அரசியலமைப்புச் சட்டம்? எதற்காக இத்தனை சட்ட திட்டங்கள்? புலம் பெயரும் தொழிலாளர்களை ஒரு பொருட்டாக ஒரு கால்நடையாகக்கூட இந்த அரசாங்கம் கவனிக்கத் தயாரில்லை என்பதிலிருந்து இந்த ஆட்சியாளர்கள் எத்தனை போலியானவர்கள் என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

கொரோனா பாதிப்பில் மத்திய ஆளும் பாஜக அரசின் நடவடிக்கைகளை பிரதான எதிர்கட்சியாக உள்ள காங்கிரஸ் கட்சி எதிர்த்து வருகிறது. பரவா யில்லையே காங்கிரஸ் கட்சி மக்களுக்காக போராடு கிறதே என்று எதிர்பார்த்தால் தொழிலாளர்களின் வேலை நேரத்தை 12 மணி நேரமாக உயர்த்தலாம் என்ற மத்திய அரசின் அறிவிப்பை அமல்படுத்த பாஜக ஆளும் மாநிலங்களைப்போல் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களான பஞ்சாப், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களும் அமல்படுத்த ஆர்வம் காட்டி மக்கள் நலன் மீதான அந்தக் கட்சியின் நம்பகத் தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

வேலையின்மை தலைவிரித்தாடும் நேரத்தில் தாங்கள் ஆளும் மாநிலங்களில் 8 மணி நேர வேலைக்கு மேல் உயர்த்தாமல், கூடுதல் ஆட்களைப் பகுதி நேரப் பணியில் அமர்த்தி நிலைமையை சமாளிக்கவும் கொஞ்சமேனும் வேலைவாய்ப்பு பிரச்னையை தீர்க்கவும் காங்கிரஸ் ஆளும் மாநில அரசுகள் முன்வராத நிலையில் இவர்கள் பாஜகவைப் எதிர்த்துச் செய்யும் அரசியல் மக்கள் நலனுக்கானது என்பது போலியானவையாக இல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்?

பொதுத்துறை வங்கிகளிடம் பெருந்தொகை வாங்கி ஏப்பம்விட்ட வைர வியாபாரி நீரவ் மோடி லண்டனுக்கு தப்பி ஓடியுள்ளார். அவரை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும் என்று இங்கிலாந்து நீதிமன்றத்தில் இந்திய அரசு வழக்கு தொடர்ந்தது. அதை எதிர்த்து மனுத்தாக்கல் செய்துள்ள நீரவ் மோடி மும்பையில் எலி மற்றும் பூச்சிகள் தொல்லை உள்ளது என்றும் மும்பை சிறைச்சாலையின் அருகில் மூடப்படாத சாக்கடை இருக்கிறது. அந்தப்பகுதியில் உள்ள குடிசைகளிலிருந்து வரும் இரைச்சல் போன்றவற்றால் தன்னுடைய மனித உரிமை பாதிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். அதற்கு பதிலளித்துள்ள மத்திய அரசு ''சிறையில் அவருக்கு தனி அறை ஒதுக்கப்படும். எலி பூச்சித்தொல்லை எதுவும் இருக்காது. அவருடைய மனித உரிமை பாதுகாக்கப்படும்'' என்று பவ்யமாக பதிலளித் துள்ளது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட இங்கிலாந்து நீதிமன்றம் நீரவ் மோடியின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது அவசியம் என்று வலியுறுத்தி யுள்ளது. இதேபோல வங்கிகளில் கடன்வாங்கி பெருந்தொகையை ஏப்பம்விட்ட விஜய் மல்லை யாவும் தற்போது தப்பி ஓடி வெளிநாட்டில்தான் இருக்கிறார். தம்மையும் தம்முடைய நிறுவனங்களை யும் இயங்க அனுமதித்தால் மொத்தக் கடனையும் அடைத்துவிடுவதாகவும் நெருக்கடியில் உள்ள அரசுக்கு இது உதவியாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

''நூறு சதவீதக் கடனையும் அடைத்துவிடுகிறேன், என்னுடைய வழக்குகளை கைவிட்டுவிடுங்கள்'' என்று அவர் கேட்டிருக்கிறார். இவரும் இந்தியச் சிறைகளில் போதிய வசதிகள் இருக்காது என்று மனு தாக்கல் செய்துள்ளார். இதற்கு பதிலளித்துள்ள மத்திய அரசு ''இவர் சிறையில் அடைக்கப்பட்டால் இவருக்காக மேற்கத்திய பாணி கழிவறை தயாராக இருக்கிறது'' என்று கூறியதோடல்லாமல் அந்த

வீடியோவையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த வழக்குகள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க கொரோனா மற்றும் ஊரடங்கால் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் போதிய போக்குவரத்து வசதியின்றி கால்நடையாக பெற்ற தாயையும் மனைவியையும் குழந்தைகளையும் கூட சுமந்து கொண்டு நாட்டின் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருக் கிறார்கள். உணவு குடிநீரின்றி சாகிறார்கள், ரயில் மோதி, லாரி மோதி சாகிறார்கள். இதுகுறித்து உச்சநீதிமன்றத்தில் அலோக் ஸ்ரீவத்சவ என்பவர் மனு தாக்கல் செய்து இவர்களுக்கு குறைந்தபட்சம் உணவு, குடிநீர், தங்கும்வசதி செய்துதர மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரியிருந்தார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த நீதிபதிகள் சாலையில் நடந்து செல்பவர்கள் யார், செல்லாதவர்கள் யார் என்று எங்களுக்கு எப்படித் தெரியும்? இதுபற்றி முடிவு செய்ய வேண்டியது அரசுகள்தான். இதுபற்றி விசாரிக்கவோ உத்தர விடவோ உச்சநீதிமன்றத்திற்கு என்ன இருக்கிறது?'' என்று வினா எழுப்பியதோடு ''தண்டவாளத்தில் படுத்து உறங்கினால் இதுபோன்ற விபத்துக்களை எப்படித் தடுக்க முடியும்?'' என்றும் வழக்கு போட்டவரை கேள்விகளால் துளைத்துள்ளது. இந்த வழக்கில் மத்திய அரசுக்காக வாதாடிய வழக்குரைஞர். புலம்பெயர் தொழிலாளர்களுக்கு போக்குவரத்து வசதி தொடங்கியுள்ளது. அரசாங்கம் சொல்வதைக் கேட்காமல் பொறுமையற்று அவர்கள் நடந்து சென்றால் அரசு என்ன செய்வது. உண்மையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுப்பதால் எந்தப்பலனும் இல்லை.'' என்று தெரிவித்துள்ளார்.

வானமே கூரையாய், சாலையே வீடாய் நடந்து செல்லும் இந்த இலட்சக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்கள் யாரும் கடன்வாங்கி ஏமாற்றியவர்கள் அல்ல. இவர்களை எலி கடித்தால் என்ன பூச்சிகள் கடித்தால் என்ன? என்பதாக மத்திய அரசின் பதிலும், நீதிமன்றங்களின் குரலும் ஒலிக்கின்றின. கடைசியாக நீதிமன்றங்களின் மேல் மக்கள் வைத்திருந்த நம்பிக்கைகளும் நொறுங்கி விழுந்திருக்கின்றன என்பது மட்டுமல்ல நீதிமன்றங்கள் ஏழை எளிய மக்களுக்கு நீதி வழங்குவதற்கான இடத்திலிருந்து நழுவி அது பணம் படைத்தவர்களும், அதிகாரம் படைத்தவர்களுக்கும் அடைக்கலம் தரும் இடமாக, அரசாங்கத்தின் விசுவாசியாக மாறிவிட்டதை எந்த ஒளிவு மறைவுமின்றி இப்போது நாட்டு மக்களுக்கு தெரிவித்திருக்கிறது. மக்கள் இப்போது உணரத்தலைப்பட்டு விட்டனர். தாங்கள் கடைசியாக நம்பிக்கை வைத்திருந்த நீதிமன்றத்தின் படிக்கட்டுகளும் கதவுகளும் போலியானவை என்று.

நெருக்கடியான காலங்கள் நல்ல தலைவர்களையும், மோசமான தலைவர்களையும் மறைக்கமுடியாத உண்மைகளையும், மறுக்கப்படும் நீதிகளையும் மட்டுமல்ல சமூகங்களாக கடந்த காலத்தில் நாம் எப்படியானவர்களாக உருவாகி வந்திருக்கிறோம் நம்முடைய உள்ளடக்கம் என்னவென்பதையும் சேர்த்தே அடையாளம் காட்டுகின்றன. இதன்பெயர்தான் ஜனநாயகம், இதன்பெயர்தான் மக்கள்நலன் என்றால் இந்த போலி சூழ் பாரதத்தில் மண்டியிட்டிருக்கும் புதர்களை வெட்டி சரிசெய்ய பொறுப்புள்ள இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரும் கத்தியுடன் புத்தியையும் பட்டை தீட்டுவது அவசியமாகும். ❖

## நம்புங்கள்
## இது மக்களுக்கான அரசு

*50 வயதை கடந்தவர்கள் வெளியே வரவேண்டாம் என சொன்ன அரசுதான்... இப்போது 50 கடந்தவர்கள் காலை 10 மணியிலிருந்து 1 மணி வரை மதுவை வாங்க வெளியே அழைக்கிறது...* ***கண்டிப்பா நம்புங்கள் இது மக்களுக்கான அரசு.***



# தமிழக அரசு மீண்டும் மீண்டும் அரசு ஊழியர், ஆசிரியர் மீது தாக்குதல்! மீண்டும் பகை முடிக்கும் பணி முடிப்போம்!

**இழக்க ஏதுமில்லை**
**உறுதியாய் முன்னேறு!**
**இல்லை எனில் -**
**சிரிக்கும் சுதந்திரமும்**
**சிதறிப் போகும்**

கொரோனா நோய் தொற்று உலகையே புரட்டிப் போட்டுள்ளது. இது மனித குலத்திற்கு மாபெரும் சவாலாக கொரோனா வந்துவிட்டது. உலகின் வல்லரசு நாடுகள் எல்லாம் மரண பீதியில் விழி பிதுங்கி நிற்கின்றன. உலகையே ஒரு சில நிமிடங்களில் அழித்தொழிக்கும் வல்லமை பெற்ற அணு ஆயுதங்களை கொண்ட வல்லரசு நாடுகள் எல்லாம் இந்த கோவிட் வைரசின் கொடுந் தாக்குதலை சமாளிக்க முடியாமல் அச்சத்தின் பிடியில் உள்ளன.

இந்தியாவில் கொரோனா தாக்குதலால் நிலைகுலைந்து போயுள்ளது. இந்தியாவில் கொரோனா நோய்த் தொற்றால் பலியானோர் எண்ணிக்கை 5184ஆக அதிகரித்துள்ளது. மேலும் ஏப்ரல் கடைசி வாரத்தில் ஒரே நாளில் இதுவரை இல்லாத அளவுக்கு 8380 பேருக்கு நோய் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதும் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 82 ஆயிரத்து 143ஆக உயர்ந்துள்ளது. குறிப்பாக தமிழகத்தில் அதன் தாக்கம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது. இந்தியாவில் தமிழ்நாடு 3வது இடத்துக்கு வந்துள்ளது.

இந்நிலையில் ‘மனதின் குரல்’ நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் அவர்கள் கொரோனாவுக்கு எதிரான யுத்தம் இன்னும் முடிந்துவிடவில்லை. இந்த நோயை வெல்ல நாம் இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது என்று கூறியுள்ளார். இன்னும் கூடுதலாக பிரதமர் அவர்கள் இந்நோயை எதிர்த்துப் போரிட வேண்டும், அந்த வல்லமையை உணர்த்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

தற்போது எனது கவனமெல்லாம் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் நலன் மீது தான் உள்ளது என்று அவர் கூறியுள்ளார். உதாரணம் அவுரங்காபாத் ரயில் விபத்து, தனது சொந்த ஊருக்கு நடந்து சென்ற தொழிலாளர்களை காவல்துறையினர் அடிக்கிறார்கள். எனவே சாலை மார்க்கமாக போனால் காவல்துறையினர் தாக்குதலில் இருந்து தப்பிக்க ரயில் பாதையில் நடந்து சென்றார்கள். நடக்க முடியாமல் அந்த ரயில் பாதையில் இரண்டு பக்கமும் புதர் மண்டியிருந்ததால் வேறு வழியில்லாமல் களைப்பில் தண்டவாளத்தில் படுத்து உறங்கி விட்டார்கள். மறுநாள் காலை ரத்தம் தோய சிதறி கிடைக்கும் சப்பாத்திகள், 16 பேர் உயிரிழந்துள்ளார்கள். ஆட்சியாளர்களுக்கு தெரியவில்லை. இன்னும் தொலைக்காட்சியில் பீகார் மாநிலத்தில் ரயில்வே பிளாட்பாரத்தில் பசியின் கொடுமையில் அம்மா இறந்து கிடக்கிறாள் என்று கூட தெரியாமல் இரண்டு வயது குழந்தை தாய் அருகில் விளையாடிக் கொண்டிருக்கும் காட்சி சமூக வலைதளங்களிலும் பத்திரிகைகளிலும் வந்துள்ளதைப் பார்த்த அனைவருக்கும் நெஞ்சை நெகிழ வைத்தது. இது எல்லாம் கண்ணுக்கு தெரியவில்லையா ஆட்சியாளர்களுக்கு. மத்திய அரசை பொறுத்தவரையில் புலம்பெயர் தொழிலாளர்களை முற்றிலுமாக கைவிட்டு விட்டது என்று கூற வேண்டும். அவர்கள் பயண செலவை கூட முழுமையாக ஏற்க மறுத்து ஏற்கனவே நிதித்துறையில் தள்ளாடிக் கொண்டிருக்கும் மாநிலங்களின் தலையில் சுமத்தியது மத்திய அரசு.

பிழைப்பை விடுத்து தங்களது சொந்த ஊருக்கு திரும்பிக் கொண்டிருக்கும் அவர்களை நோயிலிருந்தும் பொருளாதார நெருக்கடியிலிருந்தும் பாதுகாப்பதற்கு மத்திய அரசு எந்தெந்த வகையில் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று பிரதமர் அவர்கள் எதுவும் கூறவில்லை. வெறும் உபதேச வார்த்தைகளும் ஆறுதல் மொழியும் மட்டுமே பிரதமர் அவர்களிடமிருந்து வெளிப்பட்டுள்ளது. இன்னும் கூடுதலாக பத்திரிகை செய்தியில் பிரதமர் பேச்சு சத்தம் இருந்தது, ஆனால் சத்து இல்லை என்று கூட பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவை சுய சார்பு பொருளாதார நாடாக மாற்றுவதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளதாக கூறும் பிரதமர் அவர்கள் கிராமங்கள், நகரங்கள், மாவட்டங்கள், மாநிலங்கள் சுய சார்புடன் இருந்திருந்தால் இந்த அளவுக்கு சிரமங்களை நாம் எதிர் கொண்டிருக்க

மேசையிலிருந்து...

இருந்திருக்காது என வருத்தப்படுகிறார் பிரதமர் அவர்கள்.

ஆனால் சுயசார்பு என்கிற பெயரில் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் தனியாருக்கு திறந்துவிடுவது, மாநிலங்கள் கோரும் நிதியை தர மறுப்பது, சிறு குறு தொழில்கள் மற்றும் விவசாயத் துறையை மீட்டெடுக்க உருப்படியான திட்டங்களை உருவாக்க மறுப்பது என்ற ரீதியில் தான் மத்திய அரசு செயல்படுவது. பிறகு எங்கிருந்து வரும் சுயசார்பு.

கொரோனா தொற்று மற்றும் சமூக முடக்கத்தால் ஏற்பட்ட நெருக்கடியை பயன்படுத்திக் கொண்டு மத்திய, மாநில அரசு ஊழியர்கள் சலுகைகளை பறிப்பது, தன்னுடைய தாராளமய பொருளாதார திட்டத்தை அதிகரிக்க வேண்டும், மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்க வேண்டும் என பொருளாதார நிபுணர்களும் இடதுசாரி அமைப்புகளும் முன்வைக்கும் ஆலோசனைகளை கேட்பதற்கு மத்திய அரசிடம் காதுகள் இல்லை.

அதற்கு மாறாக கார்ப்பரேட் முதலாளிகளின் குரல் மட்டுமே பிரதமர் அவர்களின் மனதின் குரலாக ஒலித்து வருகிறது. இது நடைமுறையில் நாட்டைப் பற்றியும், ஏழை எளிய தொழிலாளர்களைப் பற்றியும் கவலைப்படாத மனசாட்சியற்ற குரலாகவே ஒலிக்கிறது.

### 6.5.2020 37ஆம் ஆண்டு அமைப்பு தினம்

மாநில மையத்தின் சார்பில் ஏற்கனவே சுற்றறிக்கை அனுப்பப்பட்ட அடிப்படையில் கொரோனா வைரஸ் நோய் அறிந்திருந்த போதிலும் உயிரை பணயம் வைத்து நம் தோழர்கள் செய்து வரும் மக்கள் சேவை இக்காலத்தில் மகத்தானது.

ஏற்கனவே ஏப்ரல் மாதத்தில் அரசு ஊழியர் மாத இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தாலும் கடந்த காலங்களில் ஒப்பிடுகையில் இந்த காலத்தில் அனைத்து மாவட்ட மையங்களும் மிகச் சிறப்பாகவும் எழுச்சியோடும் 37ஆம் ஆண்டு தினத்தை நடத்தியுள்ளது. அதற்கு மாநில மையத்தின் சார்பில் பாராட்டுதலை தெரிவித்து கொள்கிறோம்.

நமது சங்கத்தின் 37ஆம் ஆண்டு அமைப்பு தினம் மாநிலம் முழுவதும் 151 இடங்களில் நடைபெற்றுள்ளது.

### 8.5.2020 ஆர்ப்பாட்டம்

தமிழக அரசு கொரோனா தொற்று நோயின் காரணத்தை முன்னிட்டு நாம் போராடிப் பெற்ற சலுகைகளை பறிக்கக்கூடிய வேலைகளை தமிழக அரசு செய்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே அகவிலைப்படி முடக்கம், சரண்டர் ரத்து, பொது சேம நல நிதி வட்டி குறைப்பு செய்து அரசு ஆணைகள் பிறப்பித்தது. அதற்கு கடுமையான கண்டனத்தை தெரிவித்தோம். அதனைத் தொடர்ந்து நீண்ட காலமாக எல்லா துறைகளிலும் 4 லட்சம் பணியிடம் காலியாக உள்ளது என கோரிக்கை வைத்து போராடக்கூடிய சூழ்நிலையிலும், கடந்த ஆண்டு 2019 நவம்பர் 18 இளைஞர்களின் வேலைவாய்ப்பு பறிக்காதே, இளைஞர்களுக்கு வேலை கொடு என்று வலியுறுத்தி நாடு முழுவதும் 5 முனைகளிலிருந்து பிரச்சாரம் இயக்கம் நடத்தி நவம்பர் 2019, 18ஆம் தேதி கோட்டை நோக்கி பேரணி நடத்தி அரசுக்கு கோரிக்கை மனு கொடுத்தோம்.

இப்படிப்பட்ட கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து துறைவாரி சங்கங்களும் போராட்டம் நடத்திக் கொண்டிருக்க கூடிய நிலையில், கடந்த 07.05.2020 தமிழக அரசு, அரசு ஊழியர் ஓய்வு பெறும் வயதை 58 லிருந்து 59ஆக உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்து, அதை ரத்து செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி தமிழகம் முழுவதும் அரசு அலுவலகம் முன்பு 8.5.2020ல் கண்டன ஆர்ப்பாட்டம் என முடிவாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்த கொரோனா தொற்று நோய் காரணமாக ஊரடங்கு உத்தரவு இருந்தாலும், இளைஞர்களின் வேலை வாய்ப்பை பறிக்கக்கூடிய அரசு ஆணை ரத்து செய்ய வேண்டும் மற்றும் பறிக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் வழங்கிட வேண்டும் என வலியுறுத்தி மிக எழுச்சிகரமான ஆர்ப்பாட்டம் தமிழகம் முழுவதும் நடைபெற்றது. தமிழகத்தில் அரசியல் கட்சிகள் கூட இயக்கம் நடத்த அச்சப்பட கூடிய நிலையில், **அச்சம் என்பதை அறியாத சங்கம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்** தைரியமாக எழுந்து ஊழியர் மத்தியில் துருவ நட்சத்திரமாக விளங்குகிறது.

தமிழகத்தில் அரசு ஊழியர் ஆசிரியர்களின் பொருளாதார கோரிக்கைக்காக மட்டும் போராடக் கூடிய அமைப்பு அல்ல, சமூக கண்ணோட்டத்துடன் இளைஞர்களின் வாழ்வை பறிக்கும் அரசு ஆணை எதிர்த்துப் போராடியது, தொழிற்சங்கங்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் அரசு ஊழியர் சங்கத்தின் மீது மரியாதை உள்ளது என்றால் அது மிகையல்ல.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக இருந்தது நமது சங்கத்தின் மாவட்ட, வட்ட, துறைச்சங்க, முன்னணி ஊழியர்கள்தான். தமிழகம் முழுவதும் எழுச்சியுடனும் உணர்வுபூர்வமாகவும் களத்தில் நின்று கண்டனப் போராட்டம் நடத்திய அனைத்து மாவட்ட மையங்களுக்கும் புரட்சிகரமான பாராட்டுதலை மாநில மையத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த இக்கட்டான கொரோனா காலத்தில் தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் 271 இடங்களில் நடைபெற்றுள்ளது. தமிழக அரசின் காவல்துறை எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையிலும் எதையும் சந்திக்க துணிச்சலான முடிவை எடுத்தோம். இருப்பினும் தமிழக அரசு ஊழியர் விரோத கொள்கைகளை தொடர்ந்து கடைபிடிக்கும் இந்த அரசு, எந்த கோரிக்கைகளையும் நிறைவேற்ற முன்வரப் போவதில்லை என்பது நிதி அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எதற்கெடுத்தாலும் நிதி இல்லை, எப்போது கேட்டாலும் கஜானாவில் பணம் இல்லை என்ற பதில்தான் அரசிடமிருந்து வருகிறது.

மத்திய அரசுக்கு தமிழக அரசு அறிவிப்புகள் வெறும் காகிதங்களாக இருப்பதும் (உதாரணம்: கொரோனா நோய்த்தொற்று பணியில் பணிபுரியும் ஊழியர்கள் தவிர்க்க முடியாமல் இறக்க நேரிட்டால் ரூ.50 லட்சம் வழங்கப்படும். குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்று மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்தார். ஆனால் **தமிழ்நாட்டில் திருச்சி மாவட்டத்தை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.** மாநிலம் முழுவதும் பல மாவட்டங்களில் இந்த பணியில் ஈடுபட்டவர்கள் நோய் தொற்று ஏற்பட்டு இழந்துள்ளார்கள். இதுவரை யாருக்கும் வழங்கப்படவில்லை. பல்வேறு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பரிந்துரை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது) அறிவிப்புகளுக்குள் நம்பிக்கை துரோக, நயவஞ்சகங்கள் ஒளிந்திருப்பதும், அரசு ஊழியர்கள் இந்த அரசாங்கத்திடமிருந்து தொடர்ந்து கண்டுவரும் காட்சிகளாகும். எவ்வளவுதான் போராடினாலும் பொறுமை காத்தாலும் அரசு ஊழியர்களை வஞ்சிக்கும் போக்கு கிஞ்சிற்றும் மாறவில்லை அரசுக்கு. அரசு ஊழியர்களின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. அந்த எல்லை எதுவென்று அரசுக்கு புரிய வைக்கும் நேரம் நெருங்கி வந்துவிட்டது.

### 22.5.2020 அகில இந்திய எதிர்ப்பு நாள்

தொழிலாளர் நல சட்டங்களில் கொடூர திருத்தத்தை கண்டித்து மத்திய தொழிற்சங்கங்கள் அறைகூவலை ஏற்று அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம், தொழிலாளி வர்க்கம் நடத்தக்கூடிய போராட்டத்தில் பங்கேற்பது என முடிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து நாடு தழுவிய அளவில் நடைபெற்ற எதிர்ப்பு இயக்கத்தில் தமிழக அரசு ஊழியர் சங்கமும் பங்கேற்று வெற்றி பெறச்செய்ய வேண்டுமாறு கேட்டுக் கொண்டதின் அடிப்படையில், தமிழகம் முழுவதும் நமது அமைப்பின் சார்பில் மாவட்ட மையங்கள் பங்கேற்று சிறப்பித்துள்ளார்கள்.

ஆட்சியாளர்களின் சர்வாதிகார போக்கினால் 8 மணிநேர வேலையை 12 மணி நேரமாக உயர்த்துவது, 44 தொழிலாளர் சட்டங்களை நான்காக குறைப்பது, தொழிற்சங்க உரிமையை முடக்குவது, இத்தகைய தொழிலாளர் விரோத மக்கள் விரோத ஊழியர் விரோத கொள்கைகளை ஓரணியில் திரண்டு நம்முடைய பலத்தை முழுமையாக பயன்படுத்தி முறியடிக்க தொழிலாளி வர்க்கம் உறுதி பூண்டிருக்கிறது.

ஆம் தோழர்களே, 2003ல் தமிழக அரசு ஒரு லட்சத்து 70 ஆயிரம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை பணி நீக்கம் செய்தது. பணிநீக்கம் செய்து விட்டால் எதிர்காலத்தில் சங்கமே இருக்காது. ஊழியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் மிகப்பெரிய பிரச்சனை ஏற்படும் என கனவு கண்டது அரசு. ஆனால் வெகுண்டெழுந்த தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஊழியர்களை பாதுகாக்க களத்தில் இறங்கியது. எந்த அரசு பணி நீக்கம் செய்யப்பட்டதோ அதே அரசிடம் அனைத்து ஊழியர்களையும் அதே இடத்தில் மீண்டும் அமர்த்தியது மட்டுமல்ல, அடுத்த நடந்த சட்டமன்றத் தேர்தலில் பகை முடிப்போம் பணி முடிப்போம் என்ற கருத்துக்களை அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்தியில் கொண்டு சென்று அனைவரும் தமது ஜனநாயக கடமையை ஆற்றுங்கள் என்று அரசு ஊழியர் சங்கம், ஊழியர்களுக்கு அறைகூவல் விடுத்தோம். அதனடிப்படையில் அந்தக் காலகட்டத்தில் நடந்த பாராளுமன்ற, சட்டமன்ற தேர்தலில் யார் நம்மை பகைத்துக் கொண்டார்களோ பழி தீர்த்தார்களோ அவர்கள் ஆட்சிக்கட்டிலில் இல்லை என்பதை தற்பொழுது உள்ள ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

துடிக்கவும் வலிக்கவும் தெரிந்த இதயங்களால் தான்... உலகம் உயிர்ப்போடு இயங்கிக் கொண்டு இருக்கிறது என்றான் ஒரு கவிஞன். சமூக அவலங்களை கண்டு துடிக்கும் கோடான கோடி இதயங்களை ஒன்றிணைப்போம். அவ்வாறு ஒன்றிணைந்த இதயங்களின் குமுறலாய்... அன்று மாவீரன் பகத்சிங்கும் பி.கே.தத்தும் முழங்கியதை இன்று மீண்டும் உரத்த முழக்குவோம்... ஆட்சியாளர்களே எங்கள் நோக்கம் உயிர் பலி அல்ல... உயிர் வாழ்வது எல்லோரும் இன்புற்று வாழ்வது... எங்களது ஒரே நோக்கம் கேளாத் காதினரை கேட்கச் செய்தும், செவிமடுக்காதவர்களுக்கு தக்க எச்சரிக்கை வழங்குவதுமேயாகும்.

அதற்கென மாபெரும் சூறாவளியாய் எழுவோம். அமைதி காத்தது போதும் தோழர்களே ஆள்பவர்களின் அலட்சியப் போக்கினை விரட்டி அடிப்போம். மீண்டும் பகை முடிக்கும் பணி முடிப்போம் என்பதை இன்னொரு முறை நிகழ்த்திக் காட்ட களம் காண்போம். ❖

## 30.4.2020-ன்படி வேலை வாய்ப்பக பதிவுதாரர்கள் விவரங்கள்

| | |
|---|---|
| 18 வயதிற்குள் உள்ள பள்ளி மாணவர்கள் | 1487128 |
| 19 முதல் 23 வயது வரை உள்ள பலதரப்பட்ட கல்லூரி மாணவர்கள் | 1597046 |
| 24 முதல் 35 வயது வரையுள்ள அரசுப்பணி வேண்டி காத்திருக்கும் வேலை நாடுநர்கள் | 2557007 |
| 36 வயது முதல் 57 வயது வைர வயது முதிர்வு பெற்ற பதிவுதாரர்கள் | 1153896 |
| 58 வயதிற்கும் மேற்பட்டவர்கள் | 8481 |
| **மொத்த பதிவுதாரர்கள்** | **6803558** |

## 30.04.2020-ன்படி மாற்றுத்திறனாளிப் பதிவுதாரர்கள் விவரங்கள்

| மாற்றுத் திறனாளிகளின் வகை | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| கை, கால் குறைபாடு உடையோர் | 66714 | 35815 | 102529 |
| விழிப்புலனிழந்தோர் | 9372 | 4422 | 13794 |
| காது கேளாதோர் & வாய் பேசாதோர் | 11063 | 4982 | 16045 |
| **மொத்தம்** | **87149** | **45219** | **132368** |

**Education level wise Live Register As on 30.4.2020 CATEGORY**

| | |
|---|---|
| **BELOW GRADUATES** | |
| BELOW MATRIC | 312108 |
| MATRICULATES | 5095933 |
| HSC/PUC | 3126217 |
| DIPLOMA HOLDERS (ENGINEERING | 253346 |
| DIPLOMA HOLDERS (OTHERS) | 91962 |
| SECONDARY GRADE TEACHERS | 182191 |
| NTC | 190530 |
| NAC | 77102 |
| **GRADUATES** | |
| ARTS | 408961 |
| SCIENCE | 555842 |
| COMMERCE | 288828 |
| GRADUATE TEACHERS | 335929 |
| ENGINEERING | 225863 |
| MEDICINE | 1678 |
| AGRICULTURE | 6597 |
| AGRICULTURE ENGINEERING | 291 |
| VETERINARY | 1415 |
| LAW | 1960 |
| GRADUATE OTHERS | 107409 |
| **POST GRADUATES** | |
| ARTS | 115312 |
| SCIENCE | 130503 |
| COMMERCE | 36139 |
| POST GRADUATE TEACHERS | 249093 |
| ENGINEERING | 221593 |
| MEDICINE | 725 |
| AGRICULTURE | 524 |
| AGRICULTURE ENGINEERING | 16 |
| VETERINARY | 198 |
| LAW | 170 |
| POST GRADUATE OTHERS | 204909 |

### வரலாற்று நிகழ்வுகள்

## ரோம் தீப்பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்தாரா? உண்மை என்ன?

**ஜுன்-9**

68 - ரோமப் பேரரசர் நீரோ கட்டாயத் தற்கொலை என்பது அக்காலத்தில் உயர்குடியினருக்கு மரண தண்டனை வழங்கும் முறையாக இருந்தது. 17 வயதில் ரோமப் பேரரசராகி 13 ஆண்டுகள் ஆட்சி நடத்தியபின் நாட்டின் எதிரி என்று நீரோவை செனட் அறிவித்து இத்தண்டனையை வழங்கியது. ரோம் எரியும்போது ஃபிடில் வாசித்தவருக்கு வேறென்ன கிடைக்கும் என்று தோன்றுகிறதா?

உண்மை வேறு தீப்பிடித்த கி.பி. 64 ஜுலை 18 அன்று அவர் ரோம் நகரில் இல்லை. 50 கி.மீ. தொலைவிலுள்ள ஆண்ட்டியம் என்ற இடத்திலிருந்த அவரைச் செய்தி சென்றடைந்தவுடனே ரோம் நகருக்குத் திரும்பிய நீரோ எரிந்துகொண்டிருந்த தீயிலிருந்து மக்களை மீட்கும் பணியில் தானே நேரடியாக ஈடுபட்டதாக நீரோ காலத்தில் செனட்டரும் வரலாற்றாசிரியருமான டாசிட்டஸ் பதிவு செய்துள்ளார்.

நிவாரணப் பணிகளுக்குத் தன் சொந்த நிதியை வழங்கியதுடன் பல நாட்கள் மெய்க்காவலர்கள் கூட இன்றி இடிபாடுகளுக் கிடையே மக்களுடன் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டதாகவும் அவர் குறிப்பிடுகிறார். தீ விபத்தில் வீடிழந்தவர்கள் தங்க தன் அரண்மனைகளைத் திறந்துவிட்டதுடன் அவர்களுக்கு தட்டுப்பாடின்றி உணவுகளையும் வழங்கினார்.

தீ விபத்திற்குப்பின் நகரை மறுசீரமைப்பதற்கும் அதற்கு முன்பே வணிகம், கலை, விளையாட்டு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கும் நீரோ விதித்த வரிகள் செல்வந்தர்களை கோபத்துக்குள்ளாக்கின. அவர்களுக்கு ஆதரவாக கலகம் செய்த கிறித்தவ மதத்தலைவர்கள் உள்ளிட்டவர்களைத் தயங்காமல் நீரோ கொன்றார். இவற்றாலேயே கிறித்தவ வரலாற்றாசிரியர்கள், பிற்காலத்தில் அவரைப் பற்றி மிக மோசமாக எழுதினர். ஒரு பேரரசர் என்ற எல்லைக்குள் நிற்காமல் அனைத்து நிலைகளுக்கும் நீரோ இறங்கிப் பழகியது அக்காலத்தில் அவரை ஒரு கோமாளியாகப் பார்க்கச் செய்ததும் இவர்களுக்கு வசதியாகிப் போனது. நீரோவின் மறைவிற்குப்பின் ஒரே (கி.பி. 69) ஆண்டில் 4 பேரரசர்கள் வருமளவுக்கு ரோமப் பேரரசில் பிரச்சினைகள் ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## பாலின அடிப்படையில் ஊதிய பாகுபாட்டை ஒழித்து கட்டிட சம ஊதிய சட்டம் இயற்றப்பட்ட நாள் - ஜூன் 10

*1963- ஆண்-பெண் தொழிலாளர்களிடையே ஊதியப் பாகுபாட்டை அகற்றுவதற்கான சம ஊதியச் சட்டம்-1963இல் அமெரிக்க அதிபர் கென்னடி கையெழுத்திட்டார். இது நியாயமான பணிநிலைகள் சட்டம் 1938இன் திருத்தமாக நிறைவேற்றப்பட்டது. உண்மையில் வினிஃப்ரெட் ஸ்டான்ஸி என்ற பெண் பாராளுமன்ற உறுப்பினர். ஊதியத்தில் பாலினப் பாகுபாட்டைத் தடை செய்யும் சட்டமொன்றை 1942-லேயே அறிமுகப்படுத்தினாலும் நிறைவேற்ற முடியவில்லை.*

*இதற்கிடையில் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் (ஐஎல்ஓ) 100ஆவது தீர்மானமாக சம ஊதியம் தீர்மானம் 1951இல் நிறைவேற்றப்பட்டு 1953இல் நடைமுறைக்கு வந்தது. ஐஎல்ஓ நிறைவேற்றியுள்ள 8 அடிப்படைக் கொள்கைத் தீர்மானங்களில் இதுவும் ஒன்று சம ஊதியத்துக்கான சட்டம் அல்லது ஒப்பந்தங்களை ஒவ்வொரு நாடும் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட இதனை இதுவரை 173 நாடுகள் ஏற்பளிப்பு செய்துள்ளன. இன்னும் ஏற்காத 14 நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று என்றாலும் சம ஊதியச் சட்டத்தை அது இயற்றியது.*

*உண்மையில் பெண்களுக்குக் குறைவான ஊதியம் என்பது 18ஆம் நூற்றாண்டில் தொழிற்புரட்சிக் காலத்திலேயே பேசும் பொருளாகத் தொடங்கியது. சம ஊதியம் கேட்டு 1830களில் இங்கிலாந்தில் பெண் தொழிலாளர்கள் தொடர்ச்சியான வேலை நிறுத்தங் களை நடத்தினர். ஆனால் அக்காலத்தில் பல நேரங்களில் தொழிற்சங்கங்களே பெண்களுக்குச் சம ஊதியம் என்பதை ஏற்கத் தயாராக இல்லை. இரண்டாம் உலகப்போருக்குப் பின் இந்நிலை மாறி தொழிற்சங்கங்களும் பல நாடுகளும் சம ஊதியம் கோட்பாட்டை ஏற்கத் தொடங்கின.*

*1946இல் ஃப்ரான்ஸ் 1949இல் ஜெர்மனி ஆகிய நாடுகள் ஐஎல்ஓ தீர்மானத்திற்கு முன்பே சட்டமியற்றி விட்டன. இந்தியாவிலும் 1976இல் சம ஊதியம் சட்டம் இயற்றப்பட்டாலும் இன்றுவரை ஆண்-பெண் ஊதிய வேறுபாட்டில் கடைசி 10 நாடுகளுக் குள் அதாவது மிக மோசமான அளவு பாகுபாடு நிலவும் நாடாகவே உள்ளது. அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் பாலின அடிப்படை யில் ஊதியப் பாகுபாட்டை ஒழிக்கும் முயற்சியாக சம ஊதிய நாள் ஒன்றை ஆண்டுதோறும் கடைப்பிடிக்கின்றன.*

## கிழக்கிந்திய கம்பெனியின் ஆதிக்கம் இந்தியா முழுவதும் செலுத்துவதற்கு காரணமாக அமைந்த பிளாசிப் போர் - ஜூன் 23

*1757 - கிழக்கிந்தியக் கம்பெனி யின் இருப்பை வங்காளத்தில் உறுதிசெய்து இந்தியா முழுவதி லும் ஆதிக்கம் செலுத்துவதற்கான அடிப்படையை வகுத்துக் கொடுத்த பிளாசிப் போர் நடைபெற்றது.*

*இந்தியாவுக்கு முதலில் வந்தவர்கள் போர்ச்சு கீசியர்கள். அவர்கள் 1500-லேயே கோவாவில் காலூன்றிவிட்ட நிலையில் 1600இல் ஆங்கிலேயக் கிழக்கிந் தியக் கம்பெனியும், 1602இல் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி யும், 1664இல் ஃப்ரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியும் தொடங்கப்பட்டன.*

*கடைசியாக வந்தாலும் ஃப்ரெஞ்சுக்காரர்கள் வேகமாக வளர்ச்சியடைந்ததால் ஆங்கிலேயர் களுடன் உரசல் இருந்தது. இதனால் அவர்கள் தங்கள் படைகளை அதிகரித்துக் கொண்டே சென்றதை ஆபத்தாகக் கருதிய தந்தையின் மறைவுக்குப் பின் 1756 ஏப்ரலில் வங்காளத்தின் நவாப் ஆன 23 வயது சிராஜ் உத்தவ்லா அதற்குத் தடை விதித்தார்.*

*ஆங்கிலேயர்கள் கட்டுப்படாத தால் காசிம்பஸார் கோட்டையை யும் கல்கத்தாவையும் 1756 ஜூனில் போர்தொடுத்துக் கைப்பற்றினார். அக்காலத்தில் சென்னை புனித ஜார்ஜ் கோட்டை, கல்கத்தா வில்லியம் கோட்டை, பம்பாய் கோட்டை ஆகியவை ஆங்கிலேயரின் முக்கியத் தளங்களாக இருந்தன. வில்லியம் கோட்டை வீழ்ந்ததால் ராபர்ட் கிளைவ் தலைமையிலான படைகள் சென்னையிலிருந்து அனுப்பப்பட்டன.*

*பிளாசிப் போரில் 60 ஆயிரத்திற்கும் அதிகமான வீரர்களையும் கொஞ்சம் ஃப்ரெஞ்சுப் படையையும் கொண்ட சிராஜ் உத்தவ்லாவின் படையை வெறும் 3 ஆயிரம் அளவிலான வீரர்களைக் கொண்ட ராபர்ட் கிளைவின் படை 11 மணி நேரத்தில் வெற்றி கொண்டது. நவாபின் தளபதி மீர் ஜாஃபருக்கு கிளைவ் லஞ்சம் கொடுத்ததுடன் அவரை வங்காள நவாபாகவும் ஆக்குவதாக ஆசைகாட்டியதில் அவரது கட்டுப்பாட்டிலிருந்த சுமார் 50 ஆயிரம் வீரர்கள் போரிடவேயில்லை.*

*உண்மையில் சிராஜ் அரசின் நடவடிக்கைகள் தங்கள் வியாபாரத்திற்கு பாதிப்பை உருவாக்கும் என்று பெரு வணிகர்கள் மீர்ஜாஃபருடன் சேர்ந்து செய்த சதியை கிளைவ் பயன்படுத்திக்கொண்டார். போரின் இழப்புக்களுக்காக ஆங்கிலேயர்களுக்கு (அன்றைய மதிப்பில்) ரூ.2.2 கோடி தர மீர் ஜாஃபர் ஒப்புக்கொண்டார். வங்கத்தில் ஃப்ரெஞ்சுக் காரர்களின் பிடி தளர்ந்தது. இந்தியா முழுவதும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் வளரத் தொடங்கியது.*

தொகுப்பு : மு.பாஸ்கரன்

# குடிமை பணித் தேர்வில் அரசியல்

UPSC

Union Public Service Commission

Civil Service

இந்திய சிவில் சர்வீஸ் எனப்படும் குடிமைப் பணிகளுக்கு அதிகாரிகளைத் தேர்வு செய்யும் தேர்வு முறையில் மாற்றம் செய்ய இருக்கிறது மத்திய அரசு.

ஒவ்வொர் ஆண்டும் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (யு.பி.எஸ்.சி) சிவில் சர்வீஸ் தேர்வுகள் என்றழைக்கப்படும் குடிமைப் பணித் தேர்வுகளை நடத்துகிறது. இதில் தேர்ச்சி பெறுவோர் தரவரிசைப் பட்டியல் அடிப்படையில் ஐ.ஏ.எஸ்., ஐ.ஆர்.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., போன்ற 23 வகையான பணிகளுக்கு அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து இதுதான் நடைமுறை.

சிவில் சர்வீஸ் தேர்வானது இதுவரை 2,025 மதிப்பெண்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது. முதன்மைத் தேர்வுகளுக்கு 1,750 மதிப்பெண்கள், நேர்காணலுக்கு 275 மதிப்பெண்கள் என்ற அடிப்படையில் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. தேர்வில் மாணவர்கள் எடுக்கும் மதிப்பெண்கள் அடிப்படையிலேயே தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு ஐ.ஏ.எஸ். பணிக்குத் தேர்வு செய்யப்படுவோர் முசௌரிக்கும், ஐ.பி.எஸ். பணிகளுக்கு தேர்வு செய்யப்படுவோர். நாக்பூருக்கும் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள். பிறகு அவர்களுக்கு பணிகள் ஒதுக்கீடு செய்யப்படும். தற்போது இந்த முறையைத்தான் மத்திய அரசு மாற்ற இருக்கிறது.

## மாற்றப்படும் நடைமுறை

அதன்படி, முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வில் வெற்றி பெறுபவர்கள் அனைவரும் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள முசோரிக்குப் பயிற்சிக்குச் செல்ல வேண்டும். அங்கு அவர்களுக்கு 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும். அந்தப் பயிற்சியில் அவர்கள் பெறும் மதிப்பெண்களும் தேர்வில் சேர்த்துக் கொள்ளப்படும். பயிற்சி மதிப்பெண்களாக 400 மதிப்பெண்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் இனி முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வு, பயிற்சி மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்படும். இதன் அடிப்படையில் ஐ.ஏ.எஸ்., ஐ.ஆர்.எஸ்., ஐ.பி.எஸ்., உள்ளிட்ட பணிகள் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த முறையால் கிராமப்புற, ஏழை மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

## சூழ்ச்சி

‘சுதந்திரத்திற்கு முன்பிருந்த பூர்வாங்கத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வு மூலமே தரவரிசைப் பட்டியல் தயார் செய்து பணிகள் ஒதுக்கப்படுகின்றன. இதுவரை முதன்மைத் தேர்வுத் தாளைத் திருத்துபவர்கள் ஒரு குழுவாக இருப்பார்கள். இவர்கள் யாருமே நேர்முகத் தேர்வில் பணியாற்ற மாட்டார்கள். அதே போல நேர்முகத் தேர்வை நடத்துபவர்கள் வேறொரு குழு. இவர்களுக்குச் சம்மந்தப்பட்ட தேர்வர் முதன்மைத் தேர்வில் என்ன மதிப்பெண் எடுத்திருக்கிறார் என்று தெரியாது. இது மிகவும் ரகசியமாகவே இருக்கும். தரவரிசைப் பட்டியல் தயாரிக்கும் போது இட ஒதுக்கீடும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

உதாரணமாக, 200 ஐ.ஏ.எஸ். பணிகள் இருக்கின்றன என்றால் தரவரிசையில் பின்தங்கி இருக்கும் இருக்கும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்குக்கூட இட ஒதுக்கீடு அடிப்படையில் ஐ.ஏ.எஸ். பணி கிடைத்துவிடும். தற்போது முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வுக்குப் பிறகு எல்லாரும் முசோரிக்கு அனுப்பப்பட்டு, பயிற்சி மதிப்பெண்கள் வழங்கப்பட்டால், பயிற்சியை நடத்தும் உயரதிகாரிகள் கொண்ட குழு நினைத்தால், குறைவாக மதிப்பெண் எடுத்து தரவரிசைப் பட்டியலில் பின்தங்கியவரை கூடுதல் மதிப்பெண்கள் அளித்து மேலே கொண்டு வர வாய்ப்புகள் உள்ளன. ஐ.ஆர்.எஸ்., ஐ.எப்.எஸ். ஆகும் நிலையில் உள்ளவர்களை ஐ.ஏ.எஸ். ஆகும் நிலையில் உள்ளவர்களை கீழ் பணிகளுக்கு அனுப்பவும் வாய்ப்புகள் உள்ளது.

ஒரு வேளை புதிய தேர்வு முறை அமலானால், பூர்வாங்கத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்முகத்

தேர்வு, தொழிற்பயிற்சி என 4 நிலைகளாகத் தேர்வு மாறும். தரவரிசைப் பட்டியல் தயாரிக்கும்போது 0.5, 1 மதிப்பெண்கூட முக்கியத்துவம் பெறும். உதாரணமாக 1 முதல் 100 ஐ.ஏ.எஸ். பட்டியலுக்கான மதிப்பெண் வித்தியாசம் 20-க்கும் குறைவாக இருக்கும். இதுபோன்ற சந்தர்ப்பத்தில் ஐ.ஏ.எஸ். ஆகக்கூடியவர் ஐ.பி.எஸ்., ஐ.ஆர்.எஸ்., ஆகவும் ஐ.ஆர்.எஸ்., ஆகக்கூடியவர் ஐ.ஏ.எஸ். ஆக வேண்டும் என்ற கனவில் ஆண்டுக்கணக்கில் உழைத்தவர்களின் உழைப்பு வீணாகப்போகலாம்

தொழிற்பயிற்சி என்பது ஒருவருக்கு ஒரு விஷயத்தைக் கற்றுக் கொடுப்பதற்கான திறவுகோல். அதைப் பணியின்போது சம்மந்தப்பட்டவர் திறமையாகப் பயன்படுத்துகிறாரா, இல்லையா என்றுதான் பார்க்க வேண்டும். அதையே குடிமைப் பணிகளை ஒதுக்குவதற்கான தகுதியாக மாற்றக் கூடாது. இது இடஒதுக்கீட்டு கொள்கைக்கு எதிராகவும் பார்க்கப்படவேண்டிய விசயமாகும்.

- இரா.மங்களபாண்டியன்

## உங்களுக்கு ஒரு ஆஃபர்



''ஹலோ ராமசாமிங்களா...?''

''ஆமாம் சார். நீங்க...?''

''நாங்க சென்ட்ரல் கவர்மெண்ட்ல இருந்து பேசறோம். உங்களுக்கு நிலக்கரி சுரங்கம் எதுனா வாங்கறஎண்ணம் இருக்கா?''

''இல்லீங்களே சார்...''

''கனிமத் துறை எதுனாச்சும் வாங்கற ஐடியா?''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லியே சார்''

''யூனியன் பிரதேசங்களில் இருக்கற மின் உற்பத்தி நிறுவனங்கள்?''

''சார் வேற ராமசாமிக்கு பேசறதுக்கு பதிலா என்கிட்டே பேசிக்கிட்டிருக்கீங்கன்னு நெனக்கிறேன்.''

''இல்ல ராமசாமி சார். உங்ககிட்டேதான் பேசிக்கிட்டிருக்கேன்.

உங்களுக்கு இந்தியன் ஏர்லைன்ஸ் வாங்கற ஐடியாவாச்சும் இருக்கா?''

''சார் நான் மிடில் கிளாஸ் ஆளு சார். அடுத்த மாச சம்பளமே எனக்கு வருமான்னு தெரியல. நீங்க சொல்றதையெல்லாம் வாங்கற அளவுக்கு ஏது சார் வசதி?''

''அதனாலதான் இப்பவே கேக்கறோம். பின்னாளில், இந்த நிறுவனங்களை எல்லாத்தை யும் மத்திய அரசாங்கம், அம்பானிக்கும், அதானிக் கும், மல்லையாவுக்கும், நீரவ் மோடிக்கும் யாரையும் கேக்காமல் விற்று விட்ட துனு குறை சொல்லக் கூடாது. அதனாலதான், உங்களுக்கு முதல்ல ஆஃபர் பண்றோம்.''

''..........................................''



- குணாஜி

# நடந்தபடி எதிர்ப்பு இயக்கம் விரிவாக்கு

கொரோனா? தொற்றுப் பரவலில் தேசம்
குரோதமாய் அரசு செய்பவை நாசம்
விரோதம் என்ன? எளியோர் மீது?
குரோதமுடன் சாகச் செய்வது தீது!

தினமும் செத்து மடியும்? மானுடம்
குணமும் மாறாது அரசின்?ஆணவம்
குணமும் இரக்கம் இலாது? ஆவணம்
தினமும் அறிவிப்பில் ஊடகத் தீவிரம்

சந்தடி சாக்கில் பொதுத்துறை தாரைவார்ப்பு
பந்தடி மாதிரி பெருநிறுவன கவனிப்பு
நொந்தபடி பெரும்பான்மை தொழிலாளர் பரிதவிக்க
நடந்தபடி எதிர்ப்பு இயக்கம் விரிவாக்கு

உரிமைகள் பறிப்பில் முதலிடம் வகிப்பது
வறுமை வளர்க்கும் காவி தகிப்பது
சிறுமை சேர்ந்த அரசுகள் ஊகிப்பது
உரிமைகள் பறித்து உலையில் போடுவது

இனிஇவ் வாழ்க்கை வாழ்வதற் கியலாது
எனும்நிலை வந்திடும் போதினில் முயல்வதே
கனியெனும் புரட்சியின் அடிப்படை அறிவோம்
இனியிதைப் பயனுறச் செய்து வெல்வோம்

- பெரணமல்லூர் சேகரன்




**700** கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்தப் பேரண்டம் கடந்த சில மாதங்களாக ஒரு வைரஸின் கொடூர தாக்குதலுக்கு முன் உயிர் பயத்துடன் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கிறது. அதுதான் கொரோனா வைரஸ் தாக்குதல். இதற்கு முன்பெல்லாம் எலிக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல், சார்ஸ் வைர்ஸ் தாக்குதல் போன்ற தாக்குதல்கள் உலக மக்களை அச்சுறுத்திக் கொண்டிருந்த காலகட்டத்திலும் அவற்றை யெல்லாம் உலக சுகாதார நிறுவனம் பல்வேறு நாடுகளின் ஒத்துழைப் புடன் அவைகளுக்கு மருந்து கண்டுபிடித்து அவற்றை அழித்துவிட்டது. ஆனால், உலகம் முழுவதும் அறிவியல் தாக்கம் உள்ள சூழலில் தற்போது முளைத்திருக்கும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு மருந்து கண்டுபிடிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது உலக நாடுகள். உலக வல்லரசு என சொல்லிக் கொள்ளும் நாடுகள் எல்லாம் இந்த வைரஸ் தாக்குதல் முன்பு அடங்கி ஒடுங்கி கிடக்கிறது.

இந்த வைரஸ் 2019ஆம் ஆண்டு டிசம்பம் மாதம் தாக்க ஆரம்பித்தது. பின்னர் படிப்படியாக உலக நாடுகளை தாக்கத் தொடங்கியது. இந்தத் தாக்குதலை தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை மேற்கொள்கிறோம் என்ற பெயரில் இந்த ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் தேதி நம் இந்திய தேசம் முழுவதும் ஊரடங்கு அறிவிக்கப்பட்டது. இதனால் 130 கோடி மக்கள் வீட்டிற்குள் முடங்க அறிவுறுத்தப் பட்டனர்.

உலகையே முடக்கி இருக்கும் இந்த ஊரடங்கு காலத்தில் நோய் அபாயத்திற்கு அடுத்த முக்கியமான அபாயம் மன அழுத்தம். மன அழுத்தத்தில் இருந்து விடுபட்டு மக்கள் வீட்டிற்குள்ளேயே தங்களுக்கு பிடித்தமானவற்றை செய்தும், உற்றார் உறவினர் களுடன் நீண்ட நாட்கள் கழித்து அளவளாவியும், மனைவி மக்களுடன் குதூகலத்துடன் இருந்தாலும், வாழ்க்கைப் பயணம் என்ற கப்பல் முடங்கியது என்பது உண்மை. இந்த ஊரடங்கினால் பலருக்கு மன அழுத்தம் ஏற்பட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவங்கள் அங்கொன்றும் இங்கொன்று மாக நடந்தேறி வருகின்றன என்பது மிகக் கொடுமையான சம்பவமாக திகழ்கிறது.

இதனிடையே இக்காலகட்டம் மிகப் பெரும் சவாலாக மாறி இருக்கிறது என்றால் அது பெண்களுக்குத்தான் என்பது நிதர்சனமான உண்மை. இதுகுறித்து சர்வதேச பெண்கள் கவுன்சில் ஆழ்ந்த கவலையையும், வருத்தத்தையும் பதிவு செய்துள்ளது. பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளது குறித்து பல நாடுகளின் தலைவர்கள் தங்கள் கவலையை வெளியிட்டுள்ளனர். உதாரண மாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஊரடங்கு கால நிவாரணம் அறிவிக்கும்போது குடும்ப வன்முறைக்கு ஆளாகியுள்ள பெண்களையும் சேர்த்தே நிவாரணம் அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### இந்தியாவும் குடும்ப வன்முறையும்

இந்தியாவை பொருத்தவரை தேசிய பெண்கள் ஆணையத்திற்கு குடும்ப வன்முறைகள் குறித்து வரும் புகார்களின் எண்ணிக்கை இந்த ஊரடங்கு காலகட்டத்தில் மும் மடங்காக உயர்ந்துள்ளது. ஆனால் இது குறித்து இந்தியாவில் போதிய கவனம் செலுத்துவதாக தெரியவில்லை. இந்தியாவில் குடும்ப வன்முறை என்பதன் விகிதம் மிக அதிகம். ஆனால் குடும்ப வன்முறைக்கு எதிரான குரல் இந்தியாவில் மழுங்கலாக உள்ளது. ஏனெனில் சாதிய, வகுப்புவாத, இனப் பாகுபாடுகளை போல குடும்ப வன்முறையும் இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக தான் இருக்கிறது என்பது நிதர்சனமான உண்மை.

### தமிழகத்தில் பெண்களும் ஊரடங்கும்

தமிழக பெண்களும் இந்த ஊரடங்கிற்கு விதிவிலக்கல்ல. இக்காலகட்டமானது பெண்களுக்கு

மகிழ்ச்சியான கால கட்டமாக இல்லை. பெண்கள் மட்டுமே செய்வதற்கு என வீட்டு வேலைகள் நிரம்பிக் கிடக்கின்றன. கூடவே மதுவுக்கு அடிமையான கணவன். மது அருந்த பொருளாதாரம் இல்லை என்றாலும், மதுவை குடித்தே ஆக வேண்டும் என்பதில் அரசு விடாப்பிடியாத இருப்பதால் தொடரும் சண்டை, சச்சரவுகள், கொலைகள், வன்முறைகள். மதுவை விற்பதற்காக அரசு நடத்தும் போராட்டம் மற்ற சமூக அக்கறையில் இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. அரசு நடத்தும் மதுவிற்கான இப்போராட்டம் குடும்பப் போராட்டமாக மாறி கணவரின் அடிதடிகளும், வசைகளும், உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாலியல் துன்புறுத்தல்களும், வரதட்சணை கொடுமைகளும் நடந்தேறி வருகிறது. பெண்கள் வீட்டில் வேலை இல்லாமல் சும்மா இருப்பதாகக் கூறி அவர்கள் மீது கடும் துன்புறுத்தல்களும் இக்காலகட்டத்தில் அதிகரித்து உள்ளது. பெண்கள் சும்மா இருக்கிறார்கள் என்ற எண்ணத்தை அடியோடு மாற்ற வேண்டும்.

அதிகாலை முதல் தூங்கப் போகும் இரவு வரை வீட்டின் ஒவ்வொரு அணுவையும் நகர்த்துவதில் பெண்கள் பங்களிப்பு, உடல் உழைப்பு, மன உழைப்பு, அறிவு உழைப்பு என்பதை ஏற்றுக்கொள்ள உணர மறுக்கிற ஆணாதிக்கத்தின் அலட்சியமே பெண்கள் மீதான குடும்ப வன்முறை.

### சமூக இடைவெளி

கொரோனா வைரசிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள 'வீட்டிலேயே இரு, விலகி இரு' என்று அறிவுறுத்தப்படுகிறது. சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் வீடே பெண்களுக்கு பாதுகாப்பு அற்றதாக உள்ளது. இதற்கு அரசின் நடவடிக்கை என்ன? பெண் என்பவள் ஆண்களின் உடமையாக கருதப்படுகிறாள். அந்த உடமைக்கு ஆண்களே உரிமையாளர்கள் என்ற எண்ணம் ஆணிவேராக ஆண்கள் மனதில் உள்ளது.

பெண் என்பவள் பிள்ளை பெற்றுக் கொடுக்கும் இயந்திரமாக இருக்கும் நிலையை ஒழித்துக்கட்ட வேண்டும். ஆணாதிக்கம் நிறைந்த ஆளும் வர்க்கத்தால் வழிநடத்தப்படும் போக்கின் வெளிப்பாடாகவே இக்காலகட்டத்தில் குடும்ப வன்முறைகளை பார்க்க வேண்டும். குடும்ப வன்முறைக்கு காரணம் சம்பள வெட்டு, வேலை இழப்புகள் உள்ளிட்ட சமூக பொருளாதார பிரச்சனைகளையும் அதனால் எழுந்துள்ள மன அழுத்தங்கள், சமூக மிரட்டல்கள் ஆகியவைகளை புரிந்து கொண்டு செயல்படும் சரியான பார்வை அரசுகளுக்கு இல்லை.

### பெண்ணடிமைத் தனத்தை தூக்கி எறிவோம் பெண்ணை பாதுகாப்போம்

எந்த குடும்ப அமைப்பும் முன்பிருந்த அதேநிலையில் இன்றில்லை. சொத்துடைமையை மையமாகக் கொண்ட ஆணாதிக்க குடும்ப அமைப்பு முறையை மாற்ற வேண்டும். பெண்ணடிமைத் தனத்தை நிலைநிறுத்தியுள்ள சொத்துடைமையை தூக்கி எறியும் பொதுவுடைமை ஒன்றே அதற்கான வழியாகும் என்று ரஷ்யப் புரட்சிகர பெண் போராளி கொலந்தாய் குறிப்பிட்டதுபோல், பெண் அடிமைத்தனத்தை ஒழித்து பெண்களை குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

**சி.பரமேஸ்வரி**




## அரசு ஊழியர்களை தாக்கிய குண்டர்கள் கைது

செங்கற்பட்டில் தூய்மைப் பணியாளர்களை குண்டர்கள் தாக்கியுள்ளனர். இவர்களை கைது செய்ய வலியுறுத்தி செங்கற்பட்டு அரசு ஊழியர் சங்கம், சிஐடியு சங்கத்துடன் இணைந்து இயக்கம் நடத்தியதன் அடிப்படையில் 4 குண்டர்களை காவல்துறையினர் கைது செய்துள்ளது.



# கொரோனாவும், முறைசாரா தொழிலாளர்களின் பெருந்துயரும்



இந்தியாவிலேயே நகரங்களில் வாடகை வீட்டில் வசிப்போரின் எண்ணிக்கையை அதிகம் கொண்ட மாநிலமாக தமிழகம் உள்ளது. தமிழகத்தின் நகரவாசிகளில் 50 சதவீதம் பேர் வாடகை வீட்டில் வசிக்கின்றனர். இதில் 33 லட்சம் குடும்பங்கள் எவ்வித எழுத்து ஒப்பந்தமும் இல்லாமல் வாடகை வீட்டில் வசிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் முறைசாரா தொழிலாளர்களே ஊரடங்கு காலத்தில் வாடகை வசூலிக்க வேண்டாம் என்ற தமிழக அரசின் பெயரளவு அறிவிப்பு எவ்வித பயனும் அளிக்கவில்லை.

வாடகை செலுத்தாவிட்டால் இப்போது இல்லையென்றாலும் ஊரடங்கு முடிந்த பின்பு அதன் விளைவுகளைச் சந்திக்க வேண்டி இருக்கும் என்று அவர்கள் கூறுகின்றனர். மேலும் வீட்டு உரிமையாளர்கள் தண்ணீர் மற்றும் மின்சாரத்திற்கு அதீத கட்டணங்களை வசூலிக்கின்றனர். அரசின் மானியத்திற்குப் பிறகு மின்சாரக் கட்டணம் இலவசமாகவோ அல்லது 1.50 முதல் 6.60 வரையே (நுகர்விற்கேற்ப) உள்ள நிலையில், வீட்டு உரிமையாளர்கள் வாடகை இருப்போரிடம் ஏழிலிருந்து பத்து ரூபாய் வரை (இடத்திற்கேற்ப) பெறுகின்றனர். பெருகிவரும் நகர ஏற்றத்தாழ்விற்கு வீட்டு வாடகை மிக முக்கியக் காரணியாக உள்ளது. எந்த அறிவிப்புமின்றி வெளியேற்றப்படலாம் என்கிற அச்சத்தில் வாழும் நகர்ப்புற ஏழை மக்களின் வசிப்பிட பிரச்சனையை இந்த ஊரடங்கு முன்னுக்கு கொண்டு வந்துள்ளது.

ஊரடங்கு ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடியால் தங்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே கந்து வட்டி, தண்டல் போன்ற முறைசாரா கடன் சுமைக்குள் தொழிலாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இக்காலக்கட்டத்தில் அரசிடமிருந்தோ பணியிடத்திலிருந்தோ போதுமான உதவி கிடைக்கப் பெறாத நகர்ப்புற தொழிலாளர்கள் முறைசாராக்கடன் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இது வரும் ஆண்டுகளில் இவர்களின் வாழ்க்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

கொரோனா நிவாரண நிதிக்கென்று பல லட்சம் கோடிகள் ஒதுக்கியுள்ளோம் என்று மத்திய அரசு தம்பட்டம் அடித்தாலும் மக்களுக்குச் சென்றடையும் திட்டங்களுக்கு சொற்ப நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது.

முறைசாரா தொழிலாளர் நலவாரியங்களில் தற்போது உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு மட்டுமே நிவாரணத் தொகை வழங்கப்படுவதால் பெரும்பாலான தொழிலாளர்கள் புறக்கணிப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் 2 கோடி முறைசாரா தொழிலாளர்களும் நகரப்பகுதிகளில் மட்டுமே 92 லட்சம் முறைசாரா தொழிலாளர்களும் உள்ளனர். தமிழகத்தில் உள்ள 17 முறைசாரா நல வாரியங்களில் 74 லட்சம் தொழிலாளர்கள் மட்டுமே பதிவு செய்துள்ளனர். அதிலும் 46 லட்சம் தொழிலாளர்கள் தங்கள் உறுப்பினர் பதிவைப் புதுப்பிக்கவில்லை.

நலவாரிய உறுப்பினர் புதுப்பித்தலும் புது உறுப்பினர் சேர்க்கையிலும் தொழிற்சங்கங்கள் ஈடுபாட்டை குறைக்கும் நோக்கத்துடன் அரசு 2013 இல் நல வாரிய உறுப்பினர் பதிவு முறையில் மாற்றங்கள் செய்தது -1) தொழிலாளர்களே நேரில் வர வேண்டும், 2) கிராம நிர்வாக அலுவலர் அல்லது தாசில்தார் கையொப்பம் பெற வேண்டும் 3) ஐந்தாண்டிற்கு ஒரு முறை புதுப்பித்தல் . இந்த மாற்றங்களே நலவாரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதற்கு மிக முக்கிய காரணம். ஆய்வில் 40 சதவீதம் பேர் நலவாரிய உறுப்பினர்களாக உள்ளனர். அதிலும் 6 பேர் மட்டுமே நிவாரணத் தொகை பெற்றுள்ளனர். வெறும் 20ரூக்கும் குறைவான தொழிலாளர்களுக்கே நிவாரணம் சென்றடைந்துள்ள நிலையில், பல லட்சம் முறைசாரா தொழிலாளர்கள் வேலையின்றியும் நிவாரணத் தொகை பெற முடியாமலும் பெரும் துயரத்திற்கு ஆளாகியுள்ளனர். எனவே, நலவாரியங்களில் உறுப்பினரல்லாத கைத்தறி நெசவாளர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும்

என்று அறிவித்ததைப் போலவே எல்லா முறைசாரா தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். பயனாளிகளைக் கண்டடைவதிலும் நிவாரணத் தொகையை கொண்டு சேர்ப்பதிலும் தொழிற் சங்கங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

தங்கள் முதலாளிகளிடம் உழைப்பிற்கேற்ற கூலியைக் கேட்டு பெறுவதிலேயே சிரமம் உள்ள முறைசாரா தொழிலாளர்கள், ஊரடங்கு ஏற்படுத்தியுள்ள கடன் மற்றும் பொருளாதாரச் சுமையின் காரணமாக, ஊரடங்கு தளர்வுக்குப் பின் முன்பைவிட குறைவான கூலிக்கே வேலைக்குச் செல்லும் நிர்பந்தம் ஏற்படும். தொழிலாளர் நலன் பாதுகாக்க வேண்டிய மத்திய, மாநில அரசுகள், ஊரடங்கு காலத்தை வேலை நேரத்தை அதிகரிப் பதற்கும், தொழிலாளர் நலச்சட்டங்களை தளர்த்து வதற்குமே பயன்படுத்தியுள்ளது. இந்த இக்கட்டான காலக்கட்டத்தில் போதுமான நிவாரணமும், ஊரடங்கிற்குப் பின்னர் முறைசாரா தொழிலாளர் நலனும் பாதுகாக்கப்படவில்லை யெனில், நகர்ப்புற ஏழை மக்களின் நிலை இன்னும் மோசமாகும். நகர்ப்புற ஏழைகளை அரசு தொடர்ந்து புறக்கணித்தால், சாவின் விளிம்பில் இருக்கும் இந்திய பொருளாதாரம் மேலும் தீவிரமான நுகர்வு நெருக்கடிக்குள்ளாகும்.

- **கோ.பழனியம்மாள்**

# கரூரில் இரத்த தான முகாம்




**க**ரூரில் கடந்த 24.5.2020 அன்று இரத்த தான முகாம் அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது .இதில் மொத்தம் 42 பேர் குருதிக்கொடை அளித்தனர் .இந்நிகழ்விற்கு மாவட்ட தலைவர் மு.சுப்ரமணியன் தலைமை தாங்கினார் . கெ.சக்திவேல் மாவட்டச் செயலாளர் அனைவரையும் வரவேற்றார். கரூர் மாவட்ட வருவாய் அலுவலர், திரு .சி.ராஜேந்திரன் எம்.எஸ்.சி, எம்.பில். அவர்கள் நடைபெற்ற ரத்ததானம் முகாமிற்கு வருகை தந்து துவக்கிவைத்து பேருரை ஆற்றினார். சிறப்பு விருந்தினர்களாக கரூர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் தெரணிராஜன், சிஐடியு மாவட்ட தலைவர் ஜி.ஜீவானந்தம், எல்ஐசி ஊழியர் சங்கத்தின் தஞ்சை மண்டல துணைத் தலைவர் எஸ்.கணேசன், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் வெங்கடேசன், அஞ்சல் துறை ஊழியர் சங்கத்தின் என்.விஸ்வநாதன், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் ஐ.ஜெயராஜ், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் ராஜவேல், தமிழ்நாடு உயர்நிலை-மேல்நிலை பட்டதாரி ஆசிரியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் அ.மலைக்கொழுந்தன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர்கள் எம்.எஸ். அன்பழகன், சி.கண்ணன், என்.வெங்கடாசலம் மாவட்ட இணைச் செயலாளர்கள், மு.செல்வராணி, எல்.பாலசுப்பிரமணி, கே.இளங்கோ, மாவட்ட பொருளாளர் பொன்.ஜெயராம் மற்றும் வட்ட கிளை நிர்வாகிகள் க.அறிவழகன், மாரிமுத்து, என்.செல்வன், லட்சுமணன், மண்மங்கலம் வட்ட கிளை என்.கோபி, அரவக்குறிச்சி வட்ட கிளை மு.தங்கபாண்டியன், பி.பாஸ்கர், கிருஷ்ணராயபுரம் கிளை பழனிச்சாமி, ரஞ்சித் குமார், கடவூர் வட்ட கிளை பிரேம்குமார், ஆகியோர் இப்பணிகளை முன்னின்று செய்தனர். 42 தோழர்கள் குருதி கொடையளித்தனர்.

❖

## நடந்தோரை அரசுகள் நடத்திய விதம்!





# இந்திய சுதந்திரம்

# தலைவர்களால் மட்டும் கிடைத்தல்ல...!

கொரோனா நோய்த்தொற்று உலகம் முழுவதும் அச்சத்தை ஏற்படுத்தி வரும் சூழலில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை உலகமுழுவதும் இருக்கக்கூடிய நாடுகள் எடுத்து வருகின்றனர். இந்த நிலையில் இந்தியாவிலும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் ஒருவருக்கும் நோய்த்தொற்று பரவாமல் தடுக்க தமிழ்நாடு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளில் பல்வேறு பிரிவினரும் தங்களது பங்களிப்பை செலுத்திவருகின்றனர். அரசு ஊழியர்கள், பொதுத்துறை ஊழியர்கள் உள்ளிட்ட அனைவரும் தங்களுடைய பணியை செவ்வனே செய்து வருவதால், ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருந்த இந்த நோய் சமூகத் தொற்றாக சென்னையில் பரிணமித்து வரும் நிலை தெரிகின்றது. இந்நிலையில் பல்வேறு பகுதியைச் சேர்ந்த ஊழியர்கள் தங்களின் பங்களிப்பிற்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் இருந்து வருவது இயற்கையே.

நோய்த்தொற்றை நீக்க நேரடி பங்களிப்பை செலுத்தி வரும் மருத்துவர்கள், செவிலியர்கள்,. தூய்மை பணியாளர்கள், ஆய்வக நுட்பனர்கள் உள்ளிட்ட மருத்துவத்துறை ஊழியர்கள் பங்களிப்பு அங்கீகரிக்கப்பட்டு உரிய பாராட்டுகளையும் பெறுகின்றனர். அதேபோல் காவல்துறையைச் சார்ந்தவர்களின் பணிகளும் ஓரளவு அங்கீகரிக்கப் படுகின்றன.

அதேநேரம் இந்த நோய்த்தொற்று ஏற்படாமல் தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை, நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி நிர்வாகப் பணியாளர்கள், களப்பணியாளர்கள் உள்ளிட்ட பிற துறை ஊழியர்களின் செயல்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படுவதில்லை. ஊதியத்திற்குத் தான் பணி செய்கின்றனர் என்றபோதும் அதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற ஏக்கம் இருப்பதில் தவறில்லை.

இதே நிலைதான் அரசு உத்தரவை மதித்து நடக்கும் இதர பிரிவு மக்களுக்கும் இருக்கும். அரசு உத்தரவை ஏற்று நான் வெளியில் சுற்றாமல் வீட்டிலேயே அடங்கிக் கிடக்கும் பொழுது யார் யாரோ அரசு உத்தரவை மதிக்காமல் ஊர் சுற்றி நோயை பெற்றுக்கொண்டு மற்றவர்களுக்கு பரப்புவது என்ன நியாயம் என்று கோபம் கொள்வதும், இப்படிப்பட்ட நபர்களால் நோய்த் தொற்று பெருகி அதனால் ஊரடங்கு உள்ளிட்ட கெடுபிடிகள் நீட்டிக்கப்படுவதும் சரியில்லை என்று நிலை சரியானதுதான்.

அதேநேரம் வெளியில் வந்து கொண்டுள்ள அனைவரும் ஊர் சுற்றத்தான் வருகின்றனர் என்ற நினைப்பு சரியானதல்ல. ஒரே நாளில் எந்தவித வாய்ப்பும் கொடுக்கப்படாமல், அரசு ஊரடங்கை கடைபிடிக்க வேண்டும் என உத்தரவிட்ட நிலையில், அடுத்த வேளை சோற்றுக்கே வழியில்லாதவர்கள் நிலைகளைப்பற்றியோ, வீடே இல்லாதவர்களைப் பற்றியோ, ஊரடங்கால் தம் வசிப்பிடத்திற்கு செல்ல இயலாதவர்களைப்பற்றியோ, அதற்கான ஏற்பாடு களை செய்யாத நிலைப்பற்றியோ, கவலைப்படாத வர்களை நினைத்து கவலைப்படுவதைத் தவிர சாதாரண குடிமகனுக்கு வேறு வழியில்லை. பல்வேறு பொருளாதார சிக்கல்களைச் சந்தித்து வருபவர்கள் வேறு வழியின்றி தெருவுக்கு வர வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டனர். இவர்களுக்கான மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டியது மத்திய, மாநில அரசுகளின் கடமை. அதனை செய்தனவா அல்லது வாயால் மட்டுமே வடை சுட்டனவா என்பது அனைவருக்கும் தெரியும். சுட்ட வடையை சுவைத்துப் பார்க்க ஆசைப்பட்டாலும் அது உண்மையான வடை என்றால் மட்டுமே சாத்தியமாகும். கானல் நீர் தாகம் தணிக்காது என்பதும் அனைவருக்கும் தெரிந்ததே.

சமீபத்தில் சென்னையில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொரோனா தடுப்புப் பணியில் களப்பணியாற்றிய துப்புரவு ஆய்வாளர் கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்டு பாதிக்கப் பட்டார். அரசின் சிகிச்சை வழிகாட்டல்படி அவருக்கு நோய் அறிகுறிகள் வெளிப்படையாக தெரியாததால் வீட்டில் இருந்து சிகிச்சை

பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்பட்டார். நான்கு நாட்கள் சென்றபின் அவரிடம் அவரின் உடல் நலம் குறித்து தொலைபேசி வழியாக விசாரித்த பொழுது " நான் இப்போதுதான் நன்றாக உள்ளேன். தொடர்ந்து மூன்று மாதங்களாக ஓய்வின்றி பணிசெய்ய வைத்தார்கள். நல்லவேளை கொரோனா வந்தது. சற்று ஓய்வுகொடுத்துள்ளனர்" என்று கூறினாராம்.

ஆம். இன்று மருத்துவம், உள்ளாட்சி, காவல் உள்ளிட்ட சில துறை ஊழியர்களின் நிலை இதுதான். இதில் உயர் அலுவலர்களின் நிலையும் அடங்கும். உயிரை பணயம் வைத்து வேலை செய்கின்றோம் என்று கூறுவது இவர்கள் விசயத்தில், அதுவும் இந்த கொரோனா நேரத்தில் முற்றிலும் உண்மையாகும். யாருக்கு நோய்த்தொற்று உள்ளது யாருக்கு வரும் என்பது தெரியாமல் பணி செய்பவர்கள் மன நிலையைப் பற்றி யோசித்தால் உண்மை தெரியும். அதிலும் தம் குடும்பத்தார் எப்படி உள்ளனர் என்பதை கவனத்தில் கொள்வதற்குக்கூட நேரமின்றி பணி செய்வதும், வீட்டிற்கே செல்லாமலும், சென்றாலும் மனைவி மற்றும் குழந்தைகள் அருகில் செல்லாமல் இருப்பது கொடுமையானதே.

கண்ணுக்குத் தெரியாத நோய்த்தொற்றை எதிர்த்து போராடுபவர்கள் மட்டுமல்ல நம் நேரடி கண்ணுக்குத் தெரியாமல் நேற்றைக்கும் இன்றைக்கும் நாளைக்குமாக நாம் உயிர் வாழ உணவுத் தேவையை பூர்த்தி செய்ய காலை முதல் நடுநிசி வரை விவசாயம் செய்யும் அனைவரும், தொடர்ந்து இந்த உலகம் இயங்க தன் உழைப்பைச் செலுத்தும் தொழிலாளர்களும் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே!

இத்தகைய சூழலில் ஒவ்வொருவரும் தம் பொறுப்பை உணர்ந்து செயல்படுவதோடு, மற்றவர்களின் தியாகத்தை மதித்து அங்கீகரிப்பது சரியானது.

இந்திய சுதந்திரம் சில தலைவர்களால் மட்டும் கிடைத்ததாக நாம் சொல்லியே வளர்க்கப்பட்டுள்ளோம் (இந்திய சுதந்திர போராட்டத்திற்கும் தனக்கும் சம்மந்தமே இல்லாதவர்களைப் பற்றிக்கூட இன்று சுதந்திர போராட்ட தியாகி என புதுக்கதை வெளிவருவது தனிக்கதை) ஆனால் அன்று நடந்த சுதந்திரப் போரால் ஈர்க்கப்பட்டு, அந்நிய நாட்டானுக்கு முடி திருத்த மாட்டேன் என்று சூளுரைத்தவர்கள் முதல் சுதந்திரப் போர் வெற்றிபெற தன்னால் இயன்ற சிறு உதவியை / கடமையை செய்த அத்தனை சாதாரண குடிமக்களின் தியாகத்தால் மட்டுமே சுதந்திரம் கிடைத்தது என்பதே உண்மை.

என்ன ஒரேயொரு சோகமெனில் அப்படி பலரும் கடமையை பொறுப்புடன் நிறைவேற்றி காக்கப்பட்ட இந்திய தேசம், இன்று ஒரு சிலரின் தனிப்பட்ட நலனுக்காக மாற்றப்படுவதுதான் வருத்தமாக உள்ளது.

வெறும் வருத்தப்படுவது மட்டுமே துயரத்தினை போக்குமா?

சூரியன் வந்தால் மட்டுமே அனைத்து இடங்களிலும் இருள் விலகும் என்று விதியை எண்ணி வீனே இருப்பதைவிட, தீக்குச்சியை கொளுத்தி இருக்கும் இடத்தின் இருளை போக்க முயற்சிப்போம்.

**- நாகை அ.தி.அன்பழகன்**

# லாக்டவுன் இந்தியா

விரல் நுனி
விஞ்ஞானம்
நொடிக்குள்
வானும் பூமியும்
குறுக்கும்
நெடுக்குமாய்
சர்வே கோடுகள்
கண் திரைக்குள் ...

வளர்ச்சியென
வானளாவிய
துள்ளலில்
ஓலை குடிசை
மறித்தது
காங்கிரீட் சுவர்...

எல்லை கடந்து
கொடிய தொற்று
நீக்கமற
வளைத்து நிற்க
கால் வயிற்று
கூழுக்கும்
கைப்பிள்ளை
பாலுக்கும்
யாசகனாக்கியது
கூலிகளை
லாக்டவுன் இந்தியா...



பொழப்பின்றி
பிறப்பூருக்கு
பொடிநடையாய்
ரயில் தடத்தில்
வயல் வரப்பில்
தல சுமையோடு
கரு வலியோடு
பொழுதளந்த
நாட்கள்
கணக்கற்று தொடர
கருவிழி சொறுக
கால் வலி கடுக்க
வெட்ட வெளி
பொட்டலில்
பிரசுவமானது சிசு
டிஜிட்டல் இந்தியாவில் ...

மாடுகளுக்கு
கோசாலை கட்டி
மனுசனுக்கு
குடோனை பூட்டி
பெருச்சாளிகள்
ஊதி பெருக்கும்
மேக் இன் இந்தியாவில் ...

**- கவிஞர் ஓசூர் சி.பி.ஜெ.**

**இளைஞர்களின் வேலை வாய்ப்பை பறித்திடும்**

**அரசு ஊழியர்களின் தலைமேல் மேலும் பணிச்சுமை ஏற்றிடும்**

**அரசுத் துறைகளை தனியார் மயமாக்கிட வழி வகுத்திடும்**

# அரசாணை எண்.248ஐ தமிழக முதல்வர் உடனே திரும்பப் பெற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தி

## முதல்வருக்கு அளித்திட்ட முறையீட்டின் நகல்

கொரோனா பெருந்தொற்று என்ற பெயரில் அரசு ஊழியர்களின் உரிமைகளை முற்றாக முடக்கும் வேலைகளில் தமிழக அரசு இறங்கியுள்ளதற்கு இன்னொரு உதாரணம் அரசுத் துறைகளில் புதிய பணியிடங்களை உருவாக்குவதற்கு தடைவிதித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.248 கோவிட்-19 பெருந்தொற்று நோய் காரணமாக தமிழக அரசுக்கு ஏற்பட்டுள்ள செலவினங்களை சரிப்படுத்த இந்த அரசாணை வெளியிடப்படுவதாக அரசாணையில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் அதன் உண்மையான நோக்கம் அரசுத்துறைகளில் புதிதாக நியமனங்களை மேற்கொள்ளாமல் தொடர்ந்து ஆட்குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதும், அரசுத்துறைகளை நீர்த்துப்போகச் செய்து அவற்றைத் தனியார் மயமாக்குவது என்பதுமேயாகும்.

ஏற்கெனவே தமிழகத்தில் உள்ள அரசுத்துறைகளில் கடந்த சில வருடங்களாக பணிஓய்வு, அகால மரணம், விருப்ப ஓய்வு போன்ற காரணங்களில் ஏற்பட்டுள்ள சுமார் 4,00,000 பணியிடங்கள் நிரப்பப்படாமலேயே விடப்பட்டுள்ள நிலையில் அது குறித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசிற்கு பலமுறை முறையீடுகள் அளித்தும், போராட்டம் நடத்தியும் அந்த காலியிடங்கள் இன்றளவிலும் நிரப்பப்படாமல் உள்ளது. இத்தகைய சூழலில் இந்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளதற்கான காரணத்தை மேலோட்டமாக பார்க்கும் போது அரசுத்துறைகளில் புதிய பணியிடங்களை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது போல் தோன்றினாலும் இதன் உண்மையான நோக்கம் என்பது தப்பித்தவறிக்கூட இனிமேல் அரசாங்கத்தில் எந்த ஒரு நிரந்தர ஊழியரையும் புதிதாக பணியமர்த்திவிடக்கூடாது என்பதுதான்.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தது போல் தற்போது அரசு அலுவலகங்கள் மக்கள் நலன்சார்ந்து செயல்படுவதில்லை என்றும் திட்டங்களை கடைக்கோடி பொதுஜனத்திற்கு சென்று சேர்க்கும் வேலையில் சுணக்கம் இருப்பதாகவும் மக்களும், மற்றவர்களும் கூறுவதன் காரணம் என்ன? அரசின் இந்த ஆட்குறைப்பு நடவடிக்கைகளும், தனியார்மயத்தை நோக்கிய நகர்வுகளும்தான். புதிய பொருளாதார திட்டம் என்ற திட்டம் எல்லா மக்களும் எல்லாமும் பெற வேண்டும் என்ற சமத்துவ சித்தாந்தத்தை சுக்குநூறாக்கி யார் எப்படி போனால் என்ன, மக்களின் சுமைகளையும் நலன்களையும் அரசு ஏற்கக்கூடாது என்கிற வேதாந்தத்தை விதைத்தது. அதுதான் கொஞ்ச கொஞ்சமாக செயல் வடிவம் பெற்று மக்கள் நலன், பொதுசேவை போன்ற எல்லாவற்றையும் ஏப்பம் விட்டுவிடும் அரக்கனாக உருமாறியிருக்கிறது.

ஒரு சில அமைப்புகள் மட்டும் அரசுத் துறைகளை மக்களுக்கு பணியாற்றும் வகையில் ஆரோக்கியமானதாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று தொடர்ந்து போராடிக் கொண்டேயிருக்கின்றன. தொலைதூரப் பார்வையில் பார்க்கும்போது அரசின் இத்தகைய ஆட்குறைப்பு நடவடிக்கைகளும், ஆளெடுப்புத் தடைகளும் தொடர்ந்து கொண்டேயிருந்தால், மக்கள் நலனும், உதவும் உள்ளமும், சேவை மனப்பான்மையும் முற்றிலுமாக ஒழிந்து, நாடு முழுவதும் வணிகத்துவமும், காட்டுமிராண்டித்தனமுமே நிறைந்து நிற்கும்.

கொரோனாவுக்கு முன்பே அரசு அலுவலகங்களில் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் செயல்பாட்டிற்கு வந்துவிட்டன என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. கொரோனா வருவதற்கு முன்பான நாட்களில் அதாவது 2020 ஜனவரியில் தமிழக அரசுத் துறைகளில் ஊழியர்கள் நியமனம் நடைபெறாமல் காலியாக விடப்பட்டிருந்த இடங்கள் மட்டும் 4,00,000/-. ஓய்வு பெற்றவர்கள், விருப்ப ஓய்வில் சென்றவர்கள், பதவி உயர்வுகள் மூலம் சென்றவர்களின் மூலம் காலியான பணியிடங்கள் அப்படியே விடப்பட்டிருப்பது இன்றுவரை தொடர்கிறது. இது ஆண்டுதோறும் அதிகரித்து அதிகரித்து தற்போது பெரும்பாலான அரசு அலுவலகங்களில் மூன்று அல்லது நான்கு அரசு ஊழியர்களின் வேலையை ஒரு ஊழியரே பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எல்லா துறைச் சங்கங்களிலிருந்தும் எழுப்பப்படும் கோரிக்கைகளில் காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்ற கோரிக்கை பிரதான இடத்தைப் பிடித்துள்ளது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது 2001 முதல் 2005 வரை அரசுத்துறைகளிலும், ஆசிரியர் பணியிடங்களிலும் எந்த ஊழியரும் சேரமுடியாத

வகையில் பணி நியமனத் தடைச் சட்டம் கொண்ட வந்து அரசுப் பணிகளை முடக்கி வைத்தது. மக்கள் சேவை செய்யக்கூடிய அரசு அதிகாரிகள் இல்லாமல் மக்கள் நலத்திட்டங்கள் எப்படி அவர்களுக்குப் போய்ச்சேரும்? ஊழியர்களை நியமித்து காலியான பணியிடங்களை நிரப்பியிருக்க வேண்டிய அரசாங்கம் அதை செய்யத் தவறியதால் ஊழியர் பற்றாக்குறையால், அரசு ஊழியர்கள் மக்களுக்கு அரசின் திட்டங்களை கொண்டுபோய் சேர்ப்பது பெரும் சவாலாக எழுந்தது. ஆனால் அரசோ மக்களிடம் ''அரசு ஊழியர்கள் ஒழுங்காக வேலை செய்வதில்லை ஆனால் சம்பள உயர்வு கேட்டு மட்டும் போராடுகிறார்கள்'' என்கிற வதந்தியை மக்கள் நம்புகிற வகையில் பரப்பி, தீராப்பழியை அரசு ஊழியர்கள் மீது மக்களுக்கு அரசு ஏற்படுத்தியது இப்போதும் ஏற்படுத்த முயற்சி செய்கிறது. போதுமான ஊழியர்கள் இல்லாமல் அரசின் திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் அனைத்து துறைகளிலும் ஊழியர்கள் சில வருடங்களாகவே சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ஆதிசேஷய்யாவின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அது அரசுத் துறைகளில் உள்ள தேவையற்ற அல்லது அதிகப்படியாக உள்ள பணியிடங்களைக் கண்டறிந்து ஆட்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ள அமைக்கப்பட்டது. அந்தக்குழு அமைக்கப்பட்ட நாளிலிருந்து அரசுத்துறைகளில் காலியாகும் இடங்கள் எல்லாம் தேவையற்ற இடங்களாகவே பாவிக்கப்பட்டு அவ்விடங்களில் இன்றுவரை புதிய ஊழியர்கள் யாரும் நியமிக்கப்படாத நிலையே தொடர்கிறது. ஆதிசேஷய்யா குழு அமைக்கப்பட்டதன் நோக்கம் அரசுப்பணிகளை சீரமைக்கும் முறையாக காட்சிப்படுத்தப்பட்டாலும் உண்மையில் அதன் நோக்கம் அரசுப்பணியிடங்களை குறைப்பதைத் தாண்டி, அவற்றை தனியார் மயமாக்குவதற்கான நடைமுறை ஏற்பாடே என்பது கருவூல கணக்குத் துறையை தனியார் நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு தாரை வார்த்ததன் மூலம் உணர்த்தியுள்ளது.

வேலையின்மையும், வறுமையும் இங்கு வாழும் மக்களை சொந்தநாட்டிலேயே அகதிகளாக்கிவிடும் என்பதை ஆட்சி செய்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி வேலை தேடி கிராமங்களிலிருந்து பிற மாநிலங்களுக்கு சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை 13.90 கோடி என்கிறது புள்ளி விவரம். இப்படி செல்பவர்களைப்பற்றிய எந்த தகவல்களும் அரசாங்கத்தால் பதிவு செய்யப்படுவதில்லை.

இத்தகைய நாடோடி வாழ்க்கைக்கு உந்தப்பட்டவர்களுக்கு வாக்குரிமை, குடும்ப அட்டை, இவர்களின் குழந்தைகளுக்கு கல்வி உரிமை, மருத்துவமனையில் சிகிச்சை பெற காப்பீடு வசதி எதுவும் கிடையாது. அரசாங்கம் வகுத்துள்ள குறைந்தபட்ச ஊதியம், கண்ணியமான வாழ்க்கைக்குரிய உத்தரவாதம் பணிக்கொடை, தொழிலாளர் காப்புறுதி சட்ட பாதுகாப்பு போன்றவைகூட இவர்களுக்கு கிடைப்பதில்லை. இந்த நிதர்சனங்களைத்தான் நாம் இந்த கொரோனா காலத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்கள் மாநிலங்களுக்கு கால்நடையாக நடந்து போனபோது நாம் கண்ணீர் மல்கினோம். உத்தரவாதப்படுத்தப்படாத வேலைகளைத் தரும் தனியார்மய நடவடிக்கைகள் நாளை அரசாங்க ஊழியர்களையும் சொந்த நாட்டில் அகதிகளாக்கி விடும் என்பதுதான் நம் கண் முன்னே நடக்கும் காட்சிகளின் சாட்சிகள்.

எனவே, தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணை எண்.248 ஒரே கல்லில் பல மாங்காய்களை அடிக்கும் திட்டத்துடன் வெளியிடப்பட்டுள்ளது என்பதை அரசு ஊழியர்களும், பொது மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். புதிய பணியிடங்கள் உருவாக்க தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இருக்கின்ற காலிப் பணியிடங்களுக்கு ஊழியர்கள் நியமனம் என்பது கானல் நீர்தான். ஆக காலிப்பணியிடங்களை நிரப்பாமல் விடப்படுவதற்கான அதிகாரபூர்வ ஏற்பாடாக இந்த அரசாணை இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அடுத்ததாக புதிய பணி நியமனங்களை தடுப்பதன் மூலம் இளைஞர்களின் வேலை வாய்ப்பு கனவுகள் தவிடுபொடியாகிவிடும் என்பதிலும் எவ்வித ஐயப்பாடும் தேவையில்லை. குறைந்த பணியாளர்களுடன் இயங்கும் அரசுத்துறை அலுவலகங்களில் அரசு ஊழியர்கள் சரிவர பணி செய்வதில்லை என்கிற பழி சுமத்தப்பட்டு அந்தத் துறை(கள்) தனியாருக்கு தாரை வார்க்க வாசல் அமைத்துக் கொடுக்கும் வழிகளின் அடுத்த பாதிப்புதான் இந்த அரசாணை என்பது அரசுத்துறை அனுபவசாலிகளின் கணிப்பாக உள்ளது.

எனவே இளைஞர்களின் எதிர்காலத்தை சூறையாடும், கொக்கு தலையில் வைத்த பனம்பழத்தைப்போல் அரசுத்துறை ஊழியர்களின் வேலைப்பளுவை அதிகரிக்கச் செய்யும், அரசு வேலைகளை தனியார் வசம் ஒப்படைக்க வழிவகை ஏற்படுத்தித் தரும் இந்த அரசாணை எண்.248ஐ தமிழக அரசு உடனே திரும்பப் பெற வேண்டும் என்றும், பல ஆண்டுகளாக காலியாக விடப்பட்டுள்ள சுமார் 4,00,000 பணியிடங்களுக்கு உடனடியாக ஊழியர்களை நியமனம் செய்ய வேண்டும் என்றும், அரசுத்துறைகளை தனியார்வசம் ஒப்படைக்கும் போக்கை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

எனவே தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை ஏற்று தமிழ்க முதல்வர் அவர்கள் அரசாணை எண்.248ஐ உடனடியாக திரும்பப் பெற்று இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி, அரசு அலுவலகங்கள் தேவையான ஊழியர்களுடன் நாட்டு மக்களுக்கு சிறந்து பணியாற்ற வழிவகுக்க வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கனிவுடன் கேட்டுக் கொள்கிறோம். ❖

# காலங்கள் வேறு காட்சி ஒன்று

ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த இந்தியாவில் 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நவீன தொழிற்வளர்ச்சி ஏற்பட்டிருந்தாலும் மிக மோசமான முதலாளித்துவத்தால் பாதிக்கப்பட்டது என்னவோ தொழிலாளர்கள் தான். இவர்கள் ஒருநாளைக்கு 11 மணி முதல் 16 மணி நேரம்வரை உழைக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் பெண்களும், குழந்தைகளும் கடுமையாக பாதிக்கப் பட்டனர். அப்போது இந்தியாவை ஆண்டுக்கொண்டிருந்த ஆங்கிலேய அரசிடம் உழைக்கும் பெண்களையும், குழந்தைகளையும் பாதுகாக்கவும், வேலை நேரத்தை குறைக்கவும், விடுமுறை நாட்களின் தேவையையும் வலியுறுத்தி பல கோரிக்கைகளை தொழிலாளர்கள் முன்வைத்தனர் இதனால் அரசு 1881 ல் இந்திய ஆலை விதிகளை வெளியிட்டது.

இந்த ஆலை விதிகளின்படி ஏழுவயதுக்கும் குறைவான சிறுவர்களை வேலையில் அமர்த்தக் கூடாது என்றும் வேலையில் சேருவதற்கு குறைந்த பட்ச வயதும் வேலை நேரமும் நிர்ணயம் செய்யப் பட்டது. இந்த விதிகளை நிறைவேற்ற தொழிற்சாலை சட்டம்- 1881 கொண்டு வரப்பட்டது. இருப்பினும் அக்கால கட்டத்தில் இந்திய தொழில்கள் ஆங்கிலேயர் வசமும் பெரிய முதலாளிகள் வசமும் இருந்ததால் வர்க்கப் போராட்டமானது தொழிலாளர்களுக்கும் முதலாளித்துவத்திற்கும் ஆங்கிலேயர்களுக்கும் எதிராக தொடர்ந்தது. தொழிலாளர்கள் பலர் ஒன்றிணைந்து தொழிற்சங்க இயக்கத்தை தோற்றுவித்தனர். இந்த இயக்கமானது தொழிலாளர் பிரச்சினைகளுக்காக முதலாளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தும் அதே சமயத்தில் இதன் கொள்கைகள் முதலாளித்துவத்தை ஆதரிக்கும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்து போரிடும் என்ற குறிக்கோள்களை கொண்டதாக இருந்தது.

இந்திய தொழில்கள் அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இருந்ததால் தொழிலாளர்கள் தங்கள் குறைகளை வெளிப்படுத்த இயலாத சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் ஆங்கிலேயர்களை இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்று அறைகூவல் விடுத்தனர். இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தொழிற்சங்கத்தினர் பரவலாக இந்திய தேசிய விடுதலைப்போராட்டத்தில் குதித்தனர். 1908 ம் ஆண்டில் பம்பாய் (மும்பாய்) தொழிலாளார்கள் ஆறுநாள் வேலை நிறுத்தம் செய்ததை ரஷ்யத் தலைவர் லெனின், இந்தியர்களின் விழிப்புணர்ச்சி சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும், அரசியலையும் கடந்து நாட்டுக்காக ஒருமைப்பாட்டுடன் விளங்குகிறது என்று பாராட்டினார்.

தொழிலாளர் இயக்கத்தின் வெற்றியின் சின்னமாக விளங்கும் ரஷ்யாவில் ஏற்பட்ட அக்டோபர் புரட்சியும் அதனால் ஏற்பட்ட தொழிலாளர் புரட்சியும் இந்திய தொழிலாளர்களுக்கு புத்துணர்வு அளித்தது. மகாகவி பாரதியாரும் தனது பாடலில் "ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி; கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்" என்று ரஷ்ய புரட்சியை இந்திய விடுதலை வேட்கையுடன் ஒப்பிட்டு பாடுகிறார்.

முதல் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் விலைவாசி விண்ணை முட்டுமளவு உயர்ந்து சென்றது. ஆனால் தொழிலாளர்களின் கூலி விகிதங்கள் உயரவே இல்லை. முதலாளிகளின் லாப விழுக்காடு உயர்ந்து சென்றது. தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் மிகமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. இச்சமயத்தில் 1918-19ல் கொடிய பஞ்சம் இந்தியாவில் ஏற்பட்டது. சோதனை மேல் சோதனையாக "இன்புரையன்ஸா" என்ற வைரஸ் காய்ச்சல் பரவியதில் இலட்சக்கணக்கில் மக்கள் மடிந்தனர். இது தொழிலாளர்களின் நிலையினை மேலும் மோசமாக்கியது. இந்நிலையில் தொழிலாளர்களின் ஒத்துழைப்பை விரும்பிய அரசு அவர்களுக்கு சாதகமான நடவடிக்கைகளை எடுக்க ஆயத்தமாக இருந்தது. இதனால் மக்களிடையே தோன்றிய அரசியல் விழிப்புணர்வு காரணமாக நாடெங்கும் விடுதலை வேட்கை பெருகியது.

உரிமைக்காக போராடும் மனப்பான்மையும், உழைப்புச்சுரண்டலை எதிர்க்கும் திறனும் பெற்றனர். இதன் விளைவாக கிளர்ச்சிகளும் ஆர்ப்பாட்டங்களும் அதிகரித்தன. 1920களில் இந்தியாவில் தோன்றிய கம்யூனிஸ்ட் ஆதிக்கம் மற்றும் புரட்சி இயக்கங்களின் தாக்கத்தினால் தொழிற்சங்கத்தின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது உலக கம்யூனிஸ்ட் சங்கம் இந்திய தொழிற்சங்கத்திற்கு அனுப்பிய செய்தியில் "முதலாளித்துவத்தை அறவே ஒழிக்க உறுதி கொள்ளவேண்டும்" என்று கேட்டுக் கொண்டது.

இந்நிகழ்வுகள் சரியாக ஒரு நூற்றாண்டை கடந்து 2020-ல் இந்தியாவில் மீண்டும் ஒரு வர்க்கப்

போராட்டம் துவங்கியிருக்கிறது. 19ம் 20ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட உலகளவிளான தொழிற்புரட்சியும் அதை தொடர்ந்து பல்வேறு காலகட்டங்களில் வகுக்கப்பட்ட தொழிலாளர் சட்டங்களும் இரத்தச் சரித்திரம் கொண்டவை. எண்ணற்ற உழைப்பாளிகளின் வியர்வையாலும் கண்ணீராலும் உயிர்த் தியாகத்தாலும் விளைந்தவை. 2019 ல் இறுதியில் துவங்கிய கொரோனா கோவிட்-19 வைரஸ் எனும் வைரஸ் தொற்று உலக முழுவதையும் தாக்கி இலட்ச்ச கணக்கில் மனிதர்களை அழிந்து கொண்டிருக்கிறது. இச்சுழலில் நமது மத்திய அரசு லாக்டவுனை 2020 மார்ச் 22 முதல் அறிவித்து இன்று வரை ஐந்து கட்டமாக நீடித்து வருகிறது. சிறு குறு நிறுவனங்கள் முதல் பெரிய நிறுவனங்கள் வரை காலவரையின்றி மூடப்பட்டது.

ஏழைகள், அன்றாடங்காய்ச்சிகள், கூலித்தொழிலாளர்கள், முறைசாரா தொழிலாளர்கள் உணவுக்கு வழியின்றி தவிக்க கூடிய சூழலும், இதனால் வைரஸால் ஏற்படும் மரணத்தை விட பசியால் அதிக மக்கள் இறக்க நேரிடும் என இடது சாரி தலைவர்கள் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டே வந்தனர். ஆனால் மத்திய அரசு ஏழை மக்களுக்கான உழைக்கும் வர்க்கத்தினருக்கானஅரசாக இல்லை என்பதால் தன்காதுகளை வழக்கம்போல் இறுக மூடிக்கொண்டது மட்டுமல்லாமல் இச்சூழ்நிலையை தனக்கு சாதகமாக்கிகொண்டு தொழிலாளர்கள் தங்களின் எண்ணற்ற தியாகத்தால் பெற்ற தொழிலாளர் சட்டங்களை பெரும் முதலாளிதுவத்திற்கு அதரவாக அவைகளில் திருத்தம் கொண்டு வந்திருக்கிது.

ஏற்கனவே 44 ஆக இருந்த தொழிலாளர் சட்டங்களை 4 ஆக சுருக்கியது மட்டுமல்லாமல் இந்த கொரோனா தொற்றினால் வாழ்வாதாரத்தை இழந்து முடங்கி கிடக்கும் இச்சமயத்தில் எறிகிற நெருப்பில் எண்ணை ஊற்றுவது போல எட்டுமணிநேர வேலை என்பதை 12மணிநேரமாக மாற்றியது, தொழிற்சங்கள் வைக்கும் உரிமை மறுப்பது, தேவைப்படால் வேலை நேரத்தை நீடிக்கும் உரிமை, உழைப்புகேற்ற ஊதியம் மறுப்பு என முதலாளித்துவத்திற்கு சாதகமாக பல திருத்தங்களை கொண்டு வந்திருக்கிறது. தொழிலதிபர்களுக்கு மேலும் மேலும் கடன்கள் வழங்கி அவர்கள் பொருளாதாரத்தில் எவ்வித பாதிப்பும் அடையாமல் பாதுகாக்கப்படுகின்றனர். அவர்களின் கடன்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

இன்றைய காலகட்டத்தில் இரண்டரை மாதங்களாக பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட பலதரப்பட்ட மக்களிடம் நுகர்வு திறன் குறைந்துள்ள இச்சமயத்தில் அரசு வங்கியில் கடன்பெற்று முதலீடு செய்யும் தொழிலதிபர்கள் தங்கள் உற்பத்தி பொருட்களை நுகர்வு திறன் குறைந்த பொருளாதாரச் சந்தையில் விற்க முடியாமல் வாங்கிய கடனுக்கு நட்டத்தை காட்டும்போது மீண்டும் இந்த அரசு அந்த ஏழை தொழிலதிபர்களின் கடனை தள்ளுபடி செய்யும். இந்த மோசமான பொருளாதார நடவடிக்கையால் பாதிக்கப்படுபவர்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் உழலும் அடித்தட்டு மக்களும் விவசாயிகளும் கூலித் தொழிலாளர்களும் தான்.

இதில் நாம் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஒன்றுதான் 1920களிலும் இன்றைய 2020-ம் ஆண்டிலும் இந்தியாவை ஆளும் ஆட்சிகள் வேறாக இருந்தாலும் நாம் காணும் காட்சிகளும் சூழ்நிலைகளும் ஒன்றுதான், ஒரே மாதிரி பிரச்சினையைத்தான் இருவேறு காலகட்டங்களில் நாம் எதிர்கொள்கிறோம்.

அரசு என்பது ஒரு வர்க்கத்தின் நலனைப் பாதுகாக்க கூடிய ஒரு கருவி என்றும், இதன்படி ஆளுகின்ற அரசு முதலாளித்துவ அரசாக இருந்தால் அந்த வர்க்கத்தின் நலனை காக்கும் கருவியாக செயல்படும். அதுவே சோஷலிச அரசாக இருந்தால் உழைக்கும் வர்க்கத்தின் நலனை காக்கும் கருவியாக செயல்படும் என்று மாமேதை காரல் மார்க்ஸ் கூறுகிறார். மேலும் அரசென்பது ஒரு வர்க்கத்தின் மீது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக உள்ள ஓர் இயந்திரம். சுரண்டல் நீடிக்கிற வரையில் சமத்துவம் என்பது இருக்க முடியாது என்றும் நிலப்பிரபு தொழிலாளிக்குச் சமம் என்றோ; அல்லது பசித்த மனிதன் வயிறார உண்டு கொழுத்த மனிதனுக்குச் சமம் என்றோ கூற முடியாது என்றும் மாமேதை லெனின் கூறுகிறார்.

சுமார் நூறாண்டுகளுக்கு முன் இந்தியாவில் ஏற்பட்ட தொழிற்சங்க இயக்கம் தொழிற்சங்க உரிமைகளை முதலாளித்துவத்திடமிருந்து போராடிப் பெற்றதோடல்லாமல் வெள்ளையர்களால் சுரண்டப்பட்டு சிக்குண்டு கிடந்த இந்தியாவை மீட்க சுதந்திரத்திற்கான போராட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திகொள்ளும் கொள்கைகளை வகுத்திருந்தது.

இன்றைய இந்தியாவில் முதலாளித்துவம் மேலும் வலுவாக வளர்ந்திருப்பதும் தொழிலாளர்கள் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் மேலும் மேலும் மோசமாக நசுக்கப்படுவதும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இந்த வர்க்கப் போராட்டமானது அரசியல் போராட்டமாக பரிணமிக்கும் போது தொழிலாளி வர்க்கம் சரியாக தலைமை தாங்கி வழிநடத்தி அதில் வெற்றி காணும் போதுதான் உண்மையான சுதந்திர காற்றை நாம் வர்க்க பேதமின்றி சுவாசிக்க முடியும்.

- **தெ.வாசுகி**

# கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்

### தருமபுரி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தருமபுரி மாவட்ட மையத்தின் சார்பில் தர்மபுரி ஊராட்சி ஒன்றியம் இலக்கியம்பட்டி ஊராட்சி சத்தியவான் நகரிலுள்ள மிகவும் வறுமையில் உள்ள 22 இருளர் குடும்பங்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப் பட்டன. இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு சங்கத்தின் தருமபுரி மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன், மாவட்ட செயலாளர் கி.சேகர், மாவட்ட பொருளாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேபோல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் கொரோனா நிவாரணமாக அரசி , மளிகைபொருட்கள் மற்றும் காய்கள் அடங்கிய தொகுப்பு அரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பொய்யப் பட்டி, கட்டரசம்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள ஏழை மக்களுக்கு வழங்கப்பட்டது.

அரசு ஊழியர் சங்க மாவட்டதலைவர் எம்.சுருளிநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரூர் சட்டமன்ற உறுப்பினர். வே.சம்பத்குமார், சார்ஆட்சியர் பிரதாப் அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் ஜி.பழனியம்மாள், மாவட்ட செயலாளர் ஏ.சேகர், மாவட்ட துணைத் தலைவர்கள் அண்ணாகுபேரன், பி.எஸ்.இளவேணில், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்டசெயலாளர் சி.காவேரி அரசு ஊழியர் சங்க வட்டசெயலாளர் சி.அழகிரி, பேராசிரியர் முனைவர் சிவப்பிரகாசம் கூட்டுறவு ஊழியர் சங்க நிர்வாகி விஜயகுமார் ஆகியோர் நிவாரண பொருட்களின் தொகுப்பை வழங்கினர்.

பொய்யப்பட்டியில் 114 நபர்களுக்கும், கட்டரசம்பட்டியில் 35 நபர்களுக்கும் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக நான்காம் கட்டமாக 1 டன் அரிசி மற்றும் மளிகை பொருட்கள், காய்கறிகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாட்டினை சுதாகர், காளிமுத்து உள்ளிட்ட பொய்யப்பட்டி இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

### தென் சென்னை


டிஎம்எஸ் பகுதி குழு சார்பாக பொது முடக்கத்தால் பாதிக்கப்பட்ட தூய்மை பணியாளர் களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது. மாநிலத் தலைவர் மு.அன்பரசு ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர் வெங்கடேசன், மாநிலச் செயலாளர் நம்பிராஜன், முன்னாள் மாநில துணைத் தலைவர் கே.எம்.தியாகராஜன், மாவட்ட தலைவர் டேனியல் ஜெய் சிங், மாவட்ட செயலாளர் வினோத்குமார், பகுதி குழு தலைவர் மணிமாலா, பகுதி குழு செயலாளர் ஜெயராமன், பகுதி குழு இணைச் செயலாளர் தனசேகரன் பகுதி குழு துணைத் தலைவர் சரவணகுமார் ஆகியோர் கலந்துகொண்டு நிவாரண பொருட்களை வழங்கினர். சமுக ஆர்வலர் திரு.கௌதம் அவர்களும் உடனிருந்து சிறப்பித்தார்.

### தூத்துக்குடி

மாவட்டத்தில் 1500 அரசு ஊழியர்களுக்கு வழங்குவதற்காக கபசுர குடிநீர் பொடி அரசு சித்த மருத்துவ அலுவலர் மற்றும் மருந்தாளுநர் ஆகியோர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகளிடம் வழங்கினார்கள். மாவட்டச் செயலாளர் தே.முருகன், மாவட்ட துணைத் தலைவர் து.அண்ணாமலை பரமசிவன், மாநில துணைத் தலைவர் என்.வெங்கடேசன் ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள்.

தூத்துக்குடி மாவட்ட மையம் சார்பில் அனைத்துத்துறை ஊழியர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் விதத்தில் தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஹோமியோபதி மருந்தான ஆர்செனிக்கம் ஆல்பம் 30 சி மருந்தினை வழங்குவது என்று எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் வழங்கப்பட்டது. ❖

### "யாராவது விளக்குங்களேன் ப்ளீஸ்"



"ப்ளீஸ்...மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் சொல்ற ரூ.20 லட்சம் கோடி கணக்குல அடுத்த வேளை சோத்துக்கு வழியில்லாத 50 நாள் வேலைவெட்டி எதுவுமில்லாம பட்டினியா கிடந்த அன்றாடங் காய்ச்சிக்கு எவ்வளவு கிடைக்கும்னு யாராச்சும் கொஞ்சம் புரியற மாதிரி சொல்லுங்களேன்.''

# பறிக்கப்படும் மாநிலங்களின் உரிமை

**1947**ல் சுதந்திரம் பெற்ற பின் ஒரு ஜனநாய ஆட்சியின் கீழ் இளம் குடியரசாக விடுதலை பெற்ற நாடு தான் இந்தியா, எந்த ஒரு பிளவுவாதமும், பிரிவினை வாதமும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற எச்சரிக்கையோடு வலுவான மத்திய அரசை கொண்டிருக்கின்ற மாநிலங்களின் ஒன்றியமாக உருவாக்கப்பட்டது தான் இந்தியா.

ஆனால் சுதந்திரத்திற்குப் பின் நம் தமிழ்நாட்டில் இந்தி மொழி திணிப்பிற்கு எதிராக உருவான கொந்தளிப்புகளிலிருந்தும், பஞ்சாப், அசாம் போன்ற மாநிலங்களின் தன்னாட்சிக்கான கோரிக்கைகளி லிருந்தும் சில பயனுள்ள பாடங்களை வரலாற்றி லிருந்து நாம் கற்றுக் கொண்டிருக்கின்றோம்.

வலுவான மத்திய அரசின் அதிகாரத்திற்கு கட்டுப்பட்ட மாநிலங்களின் ஆட்சி இருந்த நிலையிலிருந்து, ஒருங்கிணைத்த மாநிலங்களின் கூட்டாட்சி மற்றும் மாநிலங்களின் சுயாட்சி என்கிற பிராந்திய உரிமைகள் சார்ந்த கோரிக்கைகள் தொடர்ந்து எழுகிறது. கடந்த சில வருடங்களாக மாநிலங்களின் உரிமைகள் யாவும் படிப்படியாக பறிக்கப்படுகின்றன. குறிப்பாக சரக்கு மற்றும் சேவை வரி புதிய கல்விக் கொள்கை, காவிரி நீர் மேலாண்மை குழு மத்திய அரசின் ஜல் சக்தியின் கீழ் கொண்டு வருதல், மாநில மின்சார வாரியம் மத்திய அரசின் கீழ் கொண்டு வரும் வரைவுத் திட்டம் என ஒன்றிய அரசு, மாநிலங்களின் உரிமைகளை பறிக்கும் செயல்களையே முன்னிறுத் துகின்றன.

### காவிரி நீர் மேலாண்மை

காவிரி விவகாரத்தில் தமிழ்நாட்டுக்குத் தற்காலிக நிவாரணம் கொடுத்தது காவிரி மேலாண்மை ஆணையம் மட்டும் தான். இதுவரை தன்னிச்சையாகச் செயல்பட்டு வந்த அந்த அமைப்பு, இப்போது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் சென்றுவிட்டது. உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி பரிந்துரைக்கப்பட்ட 177.25 டிஎம்ஸி தண்ணீரே தமிழகத்திற்கு போதாத போது இனி தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய 177.25 டிஎம்ஸி தண்ணீரும் முறையாகக் கிடைக்குமா என்பது கேள்விக் குறியாகவே நிற்கிறது.

இதற்கு, தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. ஆனால், அவற்றைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளாத சில முக்கிய கட்சிகளோ, தமிழகப் பொதுப் பணித்துறையோ, மத்திய அரசின் தற்போதைய முடிவால், தமிழக விவசாயிகளுக்குப் பாதிப்பில்லை என்றும் அவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படவில்லை என்றும் கூறி, மத்திய அரசின் செயலுக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறது. இது விவசாயம் தொடர்பான மட்டுமல்ல. காவிரி நீரால் பலடையும் தமிழகத்தின் 25 மாவட்டங்களின் பிரச்சனை.

### சரக்கு மற்றும் சேவை வரி (GST)

ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி வாயிலாக வரி விதிக்கும் முறை நெறிபடுத்தப்படும் என்றாலும் அதனால் ஏற்படுகின்ற பதிப்புகள் என்னவோ மாநிலங்களுக்கு தான். வரிகள் அனைத்து மத்திய அரசிடம் செலுத்திய பின் மாநிலங்களின் மக்கள் தொகைக்கேற்பவே பல தவணைகளாக பிரித்து தரப்படுகின்றன. இவையும் முழுமையாக கிடைப்பதில்லை என்பது மேலும் கவலை அளிக்கக்கூடிய விடயம்.

ஒப்பீட்டளவில் நன்கு வளர்ந்த மாநிலங்களான கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம் போன்றவை மத்திய வரித்தொகுப் புக்குக் கூடுதலாகப் பணத்தைச் செலுத்தி, அதே சமயம் மத்திய அரசிடமிருந்து குறைவாகத் திரும்பப் பெறுகின்றன. மத்திய அரசிடமிருந்து பெறும் நிதியானது. மத்திய நிதியுதவித் திட்டங்கள் மூலமாக மானியங்களாகவும் வருகின்றன. மத்திய நிதியுதவித் திட்டங்கள் பல்வேறு நிபந்தனைகளோடும் வழங்கப்படுகின்றன.

இந்தத் திட்டங்கள் ஒட்டுமொத்த நாட்டுக்காக வும் திட்டமிடப்படுபவை. பின்தங்கிய மாநிலங் களின் வளர்ச்சிக்கு, வளர்ந்த மாநிலங்களின் பங்கு

அவசியம். மாநிலங்களுக்கு இடையேயான இந்த நெகிழ்வுத் தன்மை தான் நாட்டின் ஒட்டுமொத்தமாக வளர்ச்சிக்கு வழி வகுக்கும். ஆனால் மாநிலங் களிலிருந்து வசூலிக்கப்படும் வரியின் பெரும் பகுதியை மத்திய அரசு சரிவர பயன்படுத்துவ தில்லை. தொழிலாளர்கள் தம் சொந்த மாநிலங்களில் வேலைவாய்ப்பில்லாமல் வட மாநிலங்களுக்கு சென்று தனக்கான உணவுத் தேவைகளை பூர்த்தி செய்யும் நிலைக்குத் தான் இந்த ஊழல் நிறைந்த அரசாங்கம் அவர்களை ஆட்படுத்தியுள்ளது. இதன் காரணமாக மேலும் வேலை வாய்ப்பின்மையே அதிகரிக்க வாய்ப்புள்ளது.

### புதிய கல்விக் கொள்கை

இன்று நடைமுறையில், தற்போதைய கல்வி முறை மாணவர்களை வெற்றி, தோல்வி என்கிற பிரித்தாளும் தன்மையின் அடிப்படையில் அவர்களை பாகுபடுத்தி, தரவரிசைப்படுத்தும் உற்பத்தி முறைக்கான தொழிற்சாலைகள்.

இன்றளவும் தோல்விக்கு பிறகு தற்கொலை தான் இறுதி முடிவு என்று போதிக்கும் சூழல்களை தான் இவை நமக்கு உருவாக்கிக் கொடுத்துள்ளது. தேர்வுக்காக மட்டுமே மாணவர்களும் தயார் படுத்தப்படுகின்றனர்.

கல்வி ஒரு தனிப்பட்ட மனிதர்களின் திறனை வெளிக்கொணர்வதற்கு பதிலாக தேர்வு, வெற்றி, வேலை, திருமணம் என்பதை போதிக்க கூடிய முதலாளி வர்க்கத்தின் கூடாரமாக மாறி உள்ளன.

அதை விடுத்து மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில் அறிவியலும், சமூகவியலும் கலந்த முழுமையான கல்வியுடன், "திறன் சார்ந்த பயிற்சி" என்ற முறையை பின்பற்றி அவர்களை மேம்படுத்தினால் மாணவர்களும் திறன் பெறுவர் அதன் வாயிலாக நாடும் நலன் பெரும்.

உதாரணமாக, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மாணவர்களுக்கு உதவித் தொகை சார்ந்த பயிற்சி வகுப்புகள் அளிப்பதன் மூலம் அவர்களின் திறன்களை வளர்ப்பதற்கும் , வறுமை காரணமாக கல்வி கற்கும் தடைகளை களைவதற்கும் ஒரு மாற்றும் முறையை செயல்படுத்தலாம்.

ஆனால் இனி வரப்போகும் புதியக் கல்வி கொள்கையும் மாணவர்களிடையே வேறுபாடுகளை போதிக்க கூடிய இடமாக, மேம்படுத்தப்பட்ட சிந்திக்கும் தன்மை அற்ற மாணவர்களை உருவாக்கும் வார்ப்புப் பட்டறைகளாக உருவெடுக்கும் என்பதே நிதர்சனம்.

மேலும் தமிழகத்தில் திராவிட இயக்கங்கள், கேரளா போன்ற மாநிலங்களில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் பெரும் முயற்சிகளால் பள்ளிக் கல்வியானது முழுவதும் இலவசமாக்கப்பட்ட சூழலில் இந்த புதிய கல்விக் கொள்கையானது குடும்ப வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை கல்விக்காக ஒதுக்குமாறு பரிந்துரைப்பதும், மூன்று வயதிலேயே ஆரம்ப கல்வியை துவங்க சொல்லுவதும் கண்டிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

அதனோடு மட்டுமல்லாமல் ஆரம்ப காலகட்டங்களில் தமிழகத்தில் திராவிட இயக்கங்கள் கல்வி மேம்பாட்டிற்காக பல நல்ல திட்டங்களை செயல்படுத்தி இருந்தாலும், தற்போதைய நிலையில் அரசு பள்ளிகளின் தரங்களை மேம்படுத்துவதை பற்றி சிந்திக்காமல், அவர்களுடைய சொந்தக் கல்வி நிறுவனங்களை மேம்படுத்துவதையே குறிக்கோளாக கொண்டுள்ளனர். உதாரணமாக, பொதுவெளியில் ஹிந்தி மொழி எதிர்ப்பும் ஆனால் அடிப்படையில் தம் சொந்த கல்வி நிறுவனங்களில் அதனை ஆதரிப்பதும் மக்களை முட்டாள் ஆக்கும் செயலாகவே உள்ளது. இந்த இரண்டடை நாடகத்தில் பாதிப்புக்குள்ளாவது என்னவோ கிராமப்புற மாணவர்களே.

அதுமட்டும் அல்லாமல் மும்மொழி கொள்கை, பழமைவாத பார்ப்பனிய சமூகத்தின் சமஸ்கிருத தூக்கிப் பிடிப்பு, இந்திமொழி திணிப்பு, தொடக்கப்பள்ளி முதற்தொடங்கி பொதுத் தேர்வு, சமசீரற்ற கல்வி அடிப்படையில் சூநுநுகூ போன்ற நுழைவுத் தேர்வுகள் என்பது எல்லாம் பா.ஜ.க தலைமையில், முதலாளித்துவத்தின் முகமூடிகளாக வலம் வந்து கொன்றிருக்கின்றன.

### மின்வாரியம்

மத்திய அரசு புதிய மின்சார சட்டத்திருத்த மசோதாவை தாக்கல் செய்துள்ளது. அதுமட்டும் அல்லாமல் இந்த சட்டத்திருத்தத்தை பற்றிய கருத்துக்களை வெறும் 21 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளது. இந்த நடவடிக்கைகள் மாநிலங்களின் உரிமையை பறிக்கும் விதமாகவும், தனியார் போன்ற பெரும் முதலாளிகளுக்கு ஆதரவாகவும், ஏழை மக்களிடம் இருந்து பணம் பறிக்கும் முயற்சியாகவும் உள்ளது.

சட்டத்திருத்த வரைவின்படி உற்பத்தி செலவிற்கு ஏற்ப மின் கட்டணத் தொகை இருக்க வேண்டும் எனவும், தற்போதுள்ள மானியங்களை கணக்கில் கொள்ளாமல் மின்கட்டணங்களை வசூலிக்க வேண்டும் எனவும், மானியத் தொகை நேரடியாக

வங்கி கணக்கிற்கு வந்து சேரும் எனவும் தெரிவித்துள்ளது. இது எந்த அளவிற்கு நடைமுறை சாத்தியம் என்றும் தெரியவில்லை. மானிய விலையில் சமையல் சிலிண்டர் என்பது ஒரே மாதிரியான தொகை ஆனால் மின் கட்டணம் என்பது மாறுபடக் கூடியது. அதுமட்டுமல்லாமல் மானியத் தொகை வாடகை வீட்டில் குடியிருப்பவருக்கு பதிலாக அந்த வீட்டின் உரிமையாளருகே சென்றடையும் நிலையும் உள்ளது.

தற்போது ஒரு குறிப்பிட்ட பகுதி உற்பத்தி மட்டுமே தனியார் வசம் உள்ளது. ஆனால் மின்சார வாரிய உரிமைகள் மாநில அரசிடம் இருந்து ஒன்றியத்திடம் செல்லும் பட்சத்தில் மின்சார விநியோக உரிமைகள் தனியாரிடம் செல்ல வாய்ப்புகள் உள்ளது. அவ்வாறு செல்லும் பட்சத்தில் விவசாயத்திற்கு மானியமாக வழங்கப்படும் இலவச மின்சாரம் முதற்கொண்டு நிறுத்தப்படும். அதுமட்டும் இல்லாமல் சேவைத்துறை என்பது வர்த்தக துறையாக மாறிவிடும்.

சமீபகாலமாக ஒன்றியத்தின் செயல்பாடுகள் யாவும் மாநிலங்களின் உரிமைகளை பறிக்கும் நோக்கத்துடனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை எதிர்த்து பல போராட்டங்களும் நடைபெறுகின்றன. ஆனால் கொரோன போன்ற பெரும் தொற்று காலங்களில் மக்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடப்பதால் அதனை சாதகமாக பயன்படுத்தி கொண்டு மக்களுக்கு எதிரான திட்டங்களையும் மாநிலங்களில் உரிமைகளை பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவது இறந்த வீட்டில் கிடைத்த வரை லாபம் என்ற பழமொழியை நினைவுப்படுத்துகிறது.

- **கோ.பழனியம்மாள்**




உச்சநீதிமன்றம் பாஜக அரசிடம் சரணடைந்துவிட்டது; இப்படிப்பட்ட ஒரு உச்ச நீதிமன்றத்தை எனது வாழ்நாளில் நான் கண்டதே இல்லை.

**- உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்**
**பிரஷாந்த் பூசன்**

உண்மையை உரக்கச் சொன்னதற்கு நன்றி!

# இனியும் மக்கள் ஏமாற வேண்டாம்

எங்கே தேடுவேன்
இருபது லட்சம் கோடியை நானும்
எங்கே தேடுவேன்..(எங்கே தேடுவேன்)

ஐந்தாம் முறையாய் ஊரடங்கை
ஐம்பத்தாறு அங்குலம் சொன்னது
ஊரடங்கில் நான்? உயிர் பிழைத்திடவே
இருபது லட்சம் கோடியை நானும்
எங்கே தேடுவேன்..(எங்கே)

விளைந்த தானியம் விற்கமுடியாமல்
நிலைகுலையும் விவசாயிக்கு கிடைத்ததா
நிலத்தின் பேரில் பெற்ற பயிர்க்கடன்
விலக்கப்பட்டதா என்றால் இல்லை..(எங்கே)

நாடு முழுவதும் ஆஸ்பத்திரிகளுக்கு
கோடிக் கணக்கில் வசதிகள் செய்து
டாக்டர்கள் நர்சுகள் பாதுகாப்புக்கு
மோடி செயல்படவில்லையே நானும்..(எங்கே)

புலம் பெயர்ந்த தொழிலாளர்கள்
நாளும் உண்ண உணவு மிலாது
நலங்கெடச் செத்து மடியும் நிலையிலும்
உளம் விரும்பி உதவி செய்யாததால்...(எங்கே)

சிறு குறு தொழில்கள் புத்துயிர் பெற்று
சிறு முன்னேற்றமும் காணும் வகையில்
சிறிதளவேனும் நிதியுதவி செய்து
அரிதெனும் உயிர்கள் காக்கப் படாததால்...(எங்கே)

வீட்டுக்குள் இருங்கள் வெளியே வராதீர்
நாட்டுக்கு அறிவுரை வெறுமனே சொல்லி
இருபது லட்சம் கோடியை தருவதாய்
இருவராம் மோடி நிர்மலா சொன்னதை..(எங்கே)

எங்கே தேடியும் கிடைக்க வில்லை
அங்கே இருக்கு அம்பானி அதானி
பொங்கிப் பெருகும் மூலதனம் ஆனது
செங்கொடி கட்சியும் சங்கமும் சொன்னது
சரியாப் போச்சு புரிஞ்சி போச்சு
இனியும் மக்கள் ஏமாற வேண்டாம்
இனியேனும் மக்கள் மாறிட வேண்டும்...(எங்கே)

- **பெரணமல்லூர் சேகரன்**

**மைடியர் காம்ரேட்ஸ்-10**

# நாம் நம் சக மனிதருக்கு கற்றுத்தரப் போவது என்ன?

"காகம் உட்கார பனம்பழம் விழுந்த கதைதான்'' என்றொரு பழமொழி சொல்வார்கள். அரசு ஊழியர்களின் முக்கிய வாழ்வாதார உரிமைகளை பறிப்பதற்கு அரசாங்கங்கள் நேரம் பார்த்து காத்திருந்து கொரோனா காலத்தில் அதை கச்சிதமாக முடித்திருக்கிறார்கள். இந்த கொரோனா காலத்தில் ஊரடங்கு நேரத்தில் அரசு ஊழியர்களால் போராட முடியாது, கேள்வி கேட்க முடியாது. மக்களிடம் பிரச்னையை எடுத்துச் செல்லமுடியாது என்ற குயுக்தியின் காரணமாக அரசு ஊழியர்களின் உரிமைகள் மீது தொடர்தாக்குதல்கள் நடந்து வருகின்றன. உண்மையில் சொல்லப்போனால் இது காகம் உட்காருவதற்காக விழக் காத்திருந்த பனம்பழத்தின் கதை என்றுதான் சொல்ல வேண்டும். 18 மாதங்களுக்கு அகவிலைப்படி இல்லை, சரண்டர் விடுப்பை மறு உத்தரவு வரை பணமாக்கிக்கொள்ள தடை. ஜிபிஎப் வட்டிக் குறைப்பு, ஓய்வுபெறும் வயது 59 ஆக அதிகரிப்பு, புதிய பணியிடங்கள் ஏற்படுத்தத் தடை என்று அரசு ஊழியர்கள் மீதான உரிமை பறிப்புகள் கொரோனா என்ற ஒரு வைரஸ் கிருமியைக் காரணம் காட்டி தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.

இந்த கொரோனா ஊரடங்கு மற்றும் 144 தடை காலத்தில் இத்தகைய உரிமை பறிப்புகளை அரசு ஊழியர்களில் பலரும் ஒரு பெரிய பின்னடைவாகப் பார்க்கிறார்கள். இதை இனிமேல் சரிசெய்ய முடியாது என்ற எதிர்மறை எண்ணங்கள் பலருடைய மனங்களிலும் ஓட ஆரம்பித்திருக்கிறது. ஒரு பின்னடைவினை நாம் எவ்வாறு பார்க்கிறோம் என்பதை தீர்மானிப்பது நமது மனப்பாங்குதான். இந்தப் பின்னடைவிலிருந்து நாம் மீண்டுவருவோம் என்ற நம்பிக்கையும் உறுதியும்தான் இந்நேரத்தில் நமக்குத் தேவை. ஒரு நேர்நிலைச் சிந்தனையாளருக்கு இந்த பின்னடைவுகள் தடைகற்களாக தெரிவதில்லை. வெற்றிக்கான படிக்கட்டுக்களாகவே தெரியும். அதுவே எதிர்நிலைச் சிந்தனையாளருக்கு முட்டுக்கட்டையாகத் தெரியும்.

டேவிட் மற்றும் கோலியாத் கதையை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரு கிராமத்தில் ஒரு அரக்கன் குழந்தைகளைக் கொடுமைப்படுத்தியும் தொல்லை கொடுத்தும் வந்தான். ஒருநாள் டேவிட் என்ற 17வயது இளைஞன் வெளியூரிலிருந்து தனது சகோதரர்களைப் பார்க்க வந்தான். அரக்கனின் கொடுமைகளைப் பற்றி அறிந்த டேவிட் தன் சகோதரர்களிடம் ''நீங்கள் ஏன் கிளர்ந்தெழுந்து அரக்கனோடு போராடக்கூடாது?'' என்று கேட்டான். அவனது சகோதரர்கள் திகிலடைந்து போய் ''அரக்கன் மிகப்பெரியவனாக இருக்கிறான். அவனை அடிப்பது என்பது இயலாத காரியம் என்று உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டனர். ஆனால் டேவிட்டோ, ''அதுதான் இல்லை. அவன் ஒன்றும் அடிக்க முடியாத அளவிற்குப் பெரியவன் இல்லை. ஆனால் சரியாக அடித்தால் தவறாது அடிபடக்கூடிய அளவுதான் பெரியவன்.'' என்றான். அந்த அரக்கனை டேவிட் கவண் கல்லால் கொன்றான். இப்போது அது வரலாறு. டேவிட் தன் சகோதரர்களைப் போல ஒரு மனிதன்தான். அவன் கொன்றது அவன் சகோதரர்கள் எல்லாம் எதிர்க்கத் தயங்கிய அதே அரக்கனைத்தான். அவர்கள் மனப்பாங்கிற்கும், டேவிட்டின் மனப்பாங்கிற்கும் உள்ள வேறுபட்ட கண்ணோட்டம் தான் பின்னடைவிலிருந்து மீள்வதற்கு காரணமாக அமைந்திருந்ததை இக்கதை உணர்த்துகிறது.

அரசாங்கத்தில் நம்முடைய உரிமைகளை பறித்துவிட்டார்கள். இனிமேல் அந்த உரிமைகளை திருப்பிக்கேட்டு எதிர்த்துப் போராடி வெற்றிபெற முடியாது என்ற மனப்பாங்கு நம்முடைய ஊழியர்கள் மத்தியில் அதிகரித்து வருவது போல் தெரிகிறது. அவர்கள் அரசாங்கம் கொடுப்பதை பெற்றுக்கொண்டு ''நமக்கும் கீழே உள்ளவர் கோடி'' என்று தமக்குத் தாமே சமாதானம் அடைய ஆரம்பித்துவிட்டார்களோ என்ற ஐயமும் எழுகிறது. தோழர்களே, இவை நம்முடைய உரிமைகள். போராடிப் பெற்ற உரிமைகள். நம்முடைய முன்னோடித் தோழர்கள் வியர்வையும் குருதியும் சிந்தி பெற்றுத்தந்த உரிமைகள். அவர்கள் போராடிப் பெற்றதை பேணிக் காக்க வேண்டியது இன்றுள்ள நம் அனைவரின் கடமை. அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு பயந்து கொண்டு இது நம்மால் முடியாது. இது நம்மால் ஆகாது என்று எதிர்மறை எண்ணங்களை மனதில் உலவ விடலாமா? நமது வாழ்க்கையே ஒரு தடை ஓட்டப்பந்தயம்தான். ''எதிர்மறை மனப்பாங்கை கொண்டிருந்தால் நமக்கு நாமே மிகப்பெரிய தடையாகி விடுவோம். அந்த மனப்பாங்கு, மனக்கசப்புக்கும், வெறுப்புக்கும், அர்த்தமற்ற வாழ்க்கைக்கும், மன அழுத்தத்திற்கும், உடல்நிலை சீர்கேட்டிற்கும் வழிவகுத்துவிடும்.'' என்று கூறுகிறார் ஷிவ் கெரா என்ற மனித செயற்பாட்டாளர்.

பிரபல இங்கிலாந்து எழுத்தாளர் சார்லஸ் டிக்கின்ஸ் தன்னுடைய அனுபவ உரையில் பல ஆண்டுகளாக ஒரு இருட்டறையில் இருந்துவந்த ஒரு கைதியைப் பற்றி எழுதுகிறார். ''அந்தக் கைதியின் 20 ஆண்டு தண்டனைக்காலம் முடிந்த பிறகு அவனுக்கு விடுதலை கிடைத்தது. காவலாளிகள் அவனை சிறைச்சாலையிலிருந்து பரந்து விரிந்துள்ள

வெளியுலகின் பிரகாசமான சூளீய வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தனர். அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். சில நிமிடங்கள் கழித்து, சிறைக்கூடத் திலேயே தன்னை மீண்டும் கொண்டுபோய் அடைத்துவிடும்படி கேட்டுக் கொண்டான். அந்த அளவிற்கு அவன் புதிதாய்ப் பெற்ற விடுதலை அவனுக்கு அசௌகரியமாய்ப் போய்விட்டது. விடுதலையின் மாற்றத்தையும், வெளியுலகையும் ஏற்றுக்கொள்வதைவிட, சிறைச்சாலையும், சங்கிலி யும், இருட்டும் அவனுக்கு மிகுந்த பாதுகாப்பான தாகவும் வசதியானதாகவும் தெரிந்தது இப்போது.'' நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளை எதிர்த்துக் கேட்காமல் கிட்டத்தட்ட இதே மனநிலையில்தான் நாமும் ஆகிக் கொண் டிருக்கிறோமா என்ற கேள்வி மனதிற்குள் எழுகிறது.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என்பவர்கள் யார்? இந்த சமுதாயத்தின் நல்லது கெட்டதுகளை நன்மை தீமைகளை அறிந்தவர்கள். நன்மைகள் நடந்தால் அதை உலகுக்குச் சொல்வதும் மக்களுக்கு கொண்டு சென்று சேர்ப்பதும் அவற்றுக்கு முன்மாதிரியாக நடப்பவர்களும்தான் அவர்கள். அதே சமயம் தவறுகள் நடக்கும்போதும் உரிமைகள் பறிக்கப்படும் போதும் உரத்துக் குரலெழுப்பு பவர்களாக இருக்க வேண்டியதும் அவர்களே. அரசாங்கத்தைப் பற்றி அறிந்த இவர்களே தவறுகளையும் தீமைகளையும் கண்டு ஒதுங்கிப் போனால் படிப்பறிவு பெறாதவர் களும், சாமானிய மக்களும் என்ன நினைப்பார்கள்? சமூக அறிவுள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்களே சும்மா இருக்கிறார்கள். நாம் செய்து என்ன ஆகிவிடப் போகிறது என்று நினைத்துவிட மாட்டார்களா? இதைச் சொல்கிறபோது எழுத்தாளர் ஜெயகாந்தனின் சின்னஞ் சிறுகதை ஒன்று நினைவில் ஓடுகிறது.

ஒரு கால் இல்லாத இளைஞன் தன் தாயுடன் வசித்து வருகிறான். ஒரு சமயம் அவன் தன் தாயுடன் பேருந்தில் செல்லும் போது பெண்கள் சீட்டில் உட்கார்ந்து செல்கிறான். அடுத்த நிறுத்தத்தில் பேருந்தில் ஏறிய பெண்மணி அவன் பெண்கள் உட்காரும் இருக்கையில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து கடினமான வார்த்தைகளால் திட்டுகிறாள். அதைப் பொறுக்கமுடியாமல் எழ, அவனுக்கு கால் இல்லாததை பார்த்த அந்தப் பெண்மணி 'ஸாரி' சொல்கிறாள். அது அவனுக்கு பெருந்துயரத்தைக் கொடுக்க கால் இல்லாத ஊனமும், தனிமையும் அவனை வாட்ட, தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்று முடிவுசெய்து வீட்டிற்கு அருகில் உள்ள ரயில்வே டிராக்கில் போய் படுத்துக் கொள்கிறான்.

ரயில் வருகிற நேரம்...ஒரு பிச்சைக்காரன் அந்த இளைஞனை ஓடி வந்து காப்பாற்றி விடுகிறான். பின் அவனிடம் சொல்கிறான், 'நான் ஒரு குஷ்டரோகி என்னுடைய கைகளைப் பார். எவ்வளவு அருவெறுப்பா இருக்கு. இவ்வளவு அருவெறுப்பா இருக்கற நானே உயிரோட இருக்கும்போது உனக்கு இந்தக் கால் ஊனம் ஒன்னும் பெரிய குறையில்லை.'' என அறிவுரை கூறி இளைஞனின் தன்னம்பிக்கை யைத் தூண்டி விடுகிறான். அதனால் தற்கொலை முயற்சியை விட்டுவிட்டு வாழ்க்கையின் மீதான புதிய நம்பிக்கையோடு தூங்கச் செல்கிறான் மாற்றுத்திறனாளி.

அடுத்த நாள் காலையில் ரயில்வே டிராக்கில் யாரோ இறந்து கிடக்கிறார்கள் என்று அக்கம்பக்கத்து வீடுகளில் உள்ளவர்கள் எல்லாம் ஓட, மாற்றுத் திறனாளியின் தாயும் பயத்தோடு ஓடுகிறாள். அதைப் பார்த்த மாற்றுத்திறனாளி தன் கையில் தடியுடன் தத்தி தத்தி ''அம்மா நான் இருக்கிறேன் அம்மா.'' என்று தன் தாயைத் தேடிப் போகிறான். ரயில்வே டிராக்கில் பிச்சைக்காரன் இறந்துகிடக்கிறான். அவனைப் பார்த்த இளைஞன் தன் தாயிடம், ''அம்மா, இவன் எனக்கு வாழக் கத்துக் கொடுத்தான்...நான் அவனுக்கு சாகக் கத்துக் கொடுத்திட்டேனே'' என்று கதறுகிறான். அவன் அம்மா ஒன்றும் புரியாமல் அவனைப் பார்க்க அவன் சொன்னான், ''நேற்று இரவு நான் தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்தபோது இவன் என்னை தடுத்தான். தன்னம்பிக்கைக் கொடுத்தான். ஆனால் நான் வந்த பிறகு, என்னைப் போன்ற ஊனமுற்ற ஒருவனே இந்த சமுதாயத்தில் வாழக் கூச்சப்பட்டு சாக நினைக்கும்போது நாம் இவ்வளவு அவமானங்களுக்கு நடுவில் இப்படி வாழ்கிறோமே என்று நினைத்து ரயில்முன் பாய்ந்துவிட்டான் போலிருக்கிறது அம்மா'' என்று கண்ணீர் மல்கினான்.

இந்தக் கதையிலிருந்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது ஒன்றே ஒன்று தான். அது, ''நாம் நம் சக மனிதர்களுக்கு வாழக் கற்றுத்தர போகிறோமா? அல்லது சாகக் கற்றுத்தரப் போகிறோமா?'' என்பதுதான்!

– ஜிஜி



''தோழர் நான் அன்னிக்கே சொன்னேன், அந்த ஆளு ஆளும் கட்சியின் அதிதீவிர அனுதாபின்னு. நீங்க நம்பலை. இப்ப பாருங்க.''

''என்ன பண்றாரு அவரு?''

''அரசாங்கம் கொரானோவோட வாழ பழகிங்கன்னு சொன்னா, இவரு வாக்கிங் போக பழகிட்டு இருக்காரு.''




**வட / தென் சென்னை**

வட சென்னை மற்றும் தென்சென்னை மாவட்டங்கள் சார்பாக சேப்பாக்கம், எழிலகத்தில் நடைபெற்றது.




தென் சென்னை மாவட்டத் தலைவர் டானியல் ஜெய்சிங் தலைமை தாங்கினார். வடசென்னை மாவட்ட செயலாளர் ம.அந்தோணிசாமி விளக்கவுரை யாற்றினார். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் துணைப் பொதுச் செயலாளரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில தலைவருமான மு.அன்பரசு கண்டன உரை யாற்றினார். தென் சென்னை மாவட்டப் பொருளாளர் சுமதி நன்றி கூறினார். வடசென்னை, தென்சென்னை மாவட்ட நிர்வாகிகள், பகுதிக்குழு நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் பங்கேற்றனர்.

**காஞ்சிபுரம்**

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத் துணைத் தலைவர் சிவதினகரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் துரை.மருதன் கோரிக்கை விளக்கைவுரையாற்றினார். ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க மாவட்ட செயலாளர் கி. மாணிக்கவேலு, வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் எஸ்.நவீன்குமார், ஓய்வூதியர் சங்கத்தின் வி.தென்னரசு ஆகியோர் கண்டன வுரையாற்றினார். மாவட்டத் தலைவர் வெ.லெனின் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் வே.குமார் நன்றி கூறினார். இதில் மாவட்ட



நிர்வாகிகள், பகுதிக்குழு நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் பங்கேற்றனர்.

**செங்கல்பட்டு**




மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் முன்பு மாவட்டத் தலைவர் சா.முகம்மது உசேன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் தாமோதரன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாவட்ட இணை செயலாளர் அ.பேபி கண்டன உரையாற்றினார். மாவட்ட துணைத்தலைவர் ஆர்.கோவிந்தன் நிறைவுரையாற்றினார். மாவட்ட இணை செயலாளர் டி.கன்னியப்பன் நன்றி கூறினார்.

**வேலூர்**

வேலூரில் மதிய உணவு இடைவேளை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



**ராணிப்பேட்டை**

ஆற்காடு வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மாவட்ட தலைவர் ஜோசப் கென்னடி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் மோகனமூர்த்தி

கோரிக்கை விளக்கவுரை ஆற்றினார். சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் செல்வம், வெங்கிடாசலம் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநில செயற்குழு உறுப்பினர் ரவி நன்றி கூறினார்.



### திருவண்ணாமலை

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்டத் தலைவர் ஜோதிசங்கர் தலைமையில் நடைபெற்றது. ஓய்வூதியர் சங்கத்தின் வரதராஜன், வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் பார்த்திபன், ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் தணிக்கையாளர் செந்தில்குமார்,



அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலப் பொருளார் எம்.பாஸ்கரன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் மாவட்ட, வட்டக் கிளை நிர்வாகிகள் மற்றும் ஓய்வூதியர் சங்கத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம்

வணிகவரித்துறை வளாத்தில் தேசிய எதிர்ப்புத் தின ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச்



செயலாளர் சிவகுமார் மற்றும் மாவட்ட இணை செயலாளர்கள் ஆதிசங்கர், மகேஸ்வரன், கோவிந்தராஜுலு, அறிவுக்கரசு மற்றும் முன்னணி ஊழியர்கள் பங்கேற்றனர்.

### தருமபுரி

மாவட்ட மையத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவல வளாகத்தில் அகில இந்திய எதிர்ப்புதின ஆர்ப்பாட்டம் எழுச்சியாக நடைபெற்றது



### சேலம்

மோட்டார் வாகன பராமரிப்புத் துறை அலுவலக வளாகத்தில் மாவட்டத் தலைவர் சி.முருகபெருமாள் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சுரேஷ் கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.



மாவட்டத் துணைத் தலைவர் சண்முகம் நன்றி கூறினார்.

### நாமக்கல்



பரமத்தியில் மாவட்டத் தலைவர் கு.இராஜேந்திர பிரசாத் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் இரா.முருகேசன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.

### திருப்பூர்

**உடுமலைப்பேட்டை** வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வட்டக் கிளைத் தலைவர் ட்டி.வைரமுத்து தலைமையில் நடைபெற்றது. வட்டக்கிளை செயலாளர் வெங்கிடுசாமி விளக்கவுரையாற்றினார். மாவட்ட செயலாளர் மா.பாலசுப்பிரமணியம் சிறப்புரையாற்றினார். வட்டத் துணை தலைவர் சண்முகசுந்தரம் நன்றி



கூறினார். மாவட்ட இணை செயலாளர் தி.திலீப், வட்ட இணை செயலாளர் பரமேஸ்வரன், நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்கத்தின் தண்டபாணி, கனகராஜ், மாரிமுத்து, சந்திரன், கருப்பசாமி சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திருப்பூர் வடக்கு** வட்டக் கிளை சார்பில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மாலையில் வட்டக் கிளை செயலாளர் பி.அமாவாசை




தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஏ.பாபு, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் பூபதி முன்னிலை வகித்தனர். மாவட்டத் துணைத் தலைவர் ஏ.ராணி சிறப்புரையாற்றினார். நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர்கள் சங்கத்தின் ஆர்.ராமன் பங்கேற்றார். கே. கருப்பன் நன்றி கூறினார். **மடத்துக் குளம்** வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அவினாசி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது.

## கோவை

கோவை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் கோவை வடக்கு வட்டக்கிளை துணைத் தலைவர் மற்றும் தமிழ்நாடு அரசு தொழிற்பயிற்சி அலுவலக உதவியாளர் மற்றும் அடிப்படை பணியாளர்



சங்கத்தின் மாநில பொது செயலாளர் ஆர்.இரவி தலைமையில் நடைபெற்றது. கோவை வடக்கு வட்டக் கிளை தலைவர் மற்றும் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை அலுவலர் சங்கத்தின் மண்டலத் தலைவர் சி.சு.பால்ராஜ் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். எஸ்.ஞானப்பிரகாசம் நன்றி கூறினார்.

## நீலகிரி

**பந்தலூர்** வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டக் கிளை துணை தலைவர் சக்கீர் தலைமையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் பரமேஸ்வரி கண்டன உரையாற்றினார். வட்டக்கிளை இணைச் செயலாளர் குமாரன் நன்றி கூறினார். பந்தலூர் வட்டக் கிளை நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் பங்கேற்றனர்.



**கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்** முன்பு மாவட்ட பொருளாளர் ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது. வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் பங்கேற்றனர்.

## கரூர்

அகில இந்திய எதிர்ப்பு தின ஆர்ப்பாட்டம் கரூரில் சிறப்பாக நடைபெற்றது.



## திருச்சி

மன்னார்புரம் பல்துறை வளாகத்தில் மாவட்ட இணைச் செயலாளர் கே.எம்.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பி.பழனிச்சாமி கோரிக்கை விளக்கவுரையாற்றினார். கூட்டுறவு தணிக்கைத்துறை மாவட்டத் தலைவர், கூட்டுறவுத் துறை சங்கத்தின் ஸ்ரீவர்ஷன், கூட்டுறவுத்துறை சங்கத்தின் மாரிகண்ணு மற்றும் சாலைப் பணியாளர்கள் சங்கத்தின் சண்முகம் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி பேசினர். மாவட்டப் பொருளாளர் சுந்தர்ராஜ் நன்றி உரையாற்றினார்



### புதுக்கோட்டை

அரசு பொது அலுவலக வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகிகள்,



பகுதிக்குழு நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்கள் பங்கேற்றனர்.

### திண்டுக்கல்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத் தலைவர் ஜெ.எஸ்.விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எஸ்.முபாரக் அலி, மாவட்ட பொருளாளர் கே.ராஜேந்திரன், மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள், முன்னணி ஊழியர்கள் பங்கேற்றனர்.



### மதுரை

பொதுப் பணித்துறை அலுவலக வளாகத்தில் மாவட்டத் தலைவர் ஜெ.மூர்த்தி தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாவட்டச் செயலாளர்



க.நீதிராஜா கோரிக்கை விளக்கவுரையாற்றினார். மாநிலத் துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி வாழ்த்துரை வழங்கினார். மாநிலப் பொதுச் செயலாளர் ஆ.செல்வம் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் மு.ராமதாஸ் நன்றி கூறினார். 23 பெண்கள் உட்பட 85 பேர் பங்கேற்றனர்.

### தேனி

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக சமூக இடைவெளியுடன் மாலை நேர ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கூட்டுறவுத் துறை ஊழியர்கள்



உள்ளிட்ட அரசு ஊழியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### நாகப்பட்டினம்

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் து.இளவரசன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் மற்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய செயற்குழு உறுப்பினர் அ.தி.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். சிஐடியு சார்பில் எஸ்.ராஜேந்திரன் உரையாற்றினார். முன்னாள் மாநிலத் துணைத்தலைவர் மற்றும் நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் சு. சிவக்குமார் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன் சேரல் நன்றி கூறினார். பாதுகாப்பு முக கவசங்களுடன் போதிய இடைவெளி விட்டு நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



### திருவாரூர்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டத் தலைவர் எம்.இராஜமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட, வட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். மாநிலச் செயலாளர் உ.சண்முகம் சிறப்புரையாற்றினார். முன்னாள் மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர்ராஜன்





நிறைவுரையாற்றினர். மாவட்டப் பொருளாளர் சி.பிரகாஷ் நன்றி கூறினார்.

### தஞ்சாவூர்

மாவட்டத் தலைவர் கோதண்டபாணி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ரெங்கசாமி விளக்கவுரையாற்றினார். முன்னாள் மாநில செயலாளரும் வேளாண்மைத்துறை அமைச்சுப்



பணியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவருமான ஆர்.பன்னீர் செல்வம் கண்டவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

### தூத்துக்குடி

கூட்டுறவுத் துறை துணைப் பதிவாளர் அலுவலகம் முன்பு சேவியர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் தே.முருகன் விளக்கவுரையாற்றினார். மாவட்ட நிர்வாகிகள்




பரமசிவன் மற்றும் சாம்டேனியல், மாநில துணைத் தலைவர் ந.வெங்கடேசன் சிறப்புரை ஆற்றினர்.

**எட்டையபுரம்** வட்டாட்சியர் அலுவலகத்தில் உணவு இடைவேளையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### கன்னியாகுமரி

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.





### கள்ளக்குறிச்சி

ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்டத் தலைவர் எல்.ஆனந்த கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது மாவட்டத் துணைத் தலைவர் வீரபுத்திரன் வரவேற்றார். மாவட்ட செயலாளர் கே.மகாலிங்கம் கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.



ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் ரஹீம், துறைவாரி சங்கத்தை சேர்ந்த முத்து, வெள்ளத்துறை, வட்டக்கிளை நிர்வாகிகள் கோதண்டராமன், குமாரத் தேவன், வேலு, சுலைமான், சின்ன சேலம் வட்டச் செயலாளர் அண்ணாமலை உள்ளிட்ட ஊழியர்கள் பங்கேற்றனர். சாமிதுரை நன்றி கூறினார். ❖

### நவீன இந்தியாவின் இரண்டு பக்கங்கள்




Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com

# கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் மற்றும் ஆர்செனிக்கம் ஆல்பம் 30C மாத்திரை வழங்குதல்





தென்சென்னை மாவட்டம் டி.எம்.எஸ். பகுதிக்குழு சார்பில் மேற்கொள்ளப்பட்ட ஆர்செனிக்கம் ஆல்பம் 30சி மாத்திரை வழங்கும் நிகழ்வு




தென்சென்னை மாவட்டம் டி.எம்.எஸ். பகுதிக்குழு சார்பில் வழங்கப்பட்ட நிவாரணம்



தருமபுரி

கரூரில் நடைபெற்ற இரத்த தான முகாம்









தூத்துக்குடி

Registered Postal Registration No.TN/CH/(C)/200/2018-2020 WPP.No.TN/PMG(CCR)/ WPP-431-2020 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirka Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 10.06.2020






Registered Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai,Chennai-600002.
Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com